837

15 MAY 1929
MADRAS

Regis. No M 2147

# THE AGRICULTURIST

***A monthly Journal devoted to Agriculture and its allied subjects***

# கிருஷிகன்

## ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை



| | | |
|---|---|---|
| **Vol XII** | 1929ம் ௵ மேமீ 14உ | No 2 |
| புத்தகம் 12 | சுக்ல௵ வைகாசிமீ 1உ | பிரதி. 2 |



| CONTENTS | PAGE | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|

| Facts which ryots should consider in manuring | 25 | கிருஷிகர் எருவிடுவதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் | 25 |
| When should Cows be taken for bull Service | 31 | பசுக்களை எப்போது போலிய விடகொண்டு போகவேண்டும் | 31 |
| Experiments conducted by the Agricultural Department on Ensilage | 34 | விவசாயடிபார்டுமெண்டார் குழிகளில் தீவனத்தைச் சேகரித்து பந்தோபஸ்து செய்துவைத்துப் பரீட்சை செய்த விவரம் | 34 |
| Correspondence | 36 | கடிதம் | 36 |
| Review | 51 | புஸ்தக விமர்சனம் | 51 |
| Almanack | 52 | பஞ்சாங்கம் | 52 |


**Editor Rao BahadurJ Chelvarangaraju**
Jagannadha Baugh Saidapet
Annual Subscription inculding Postage Re on only

Copyright Registered

## கவனியுங்கள்

விவசாயத்தில் இப்போது அடையும் இலாபத்தைவிட அதிக இலாபம் பெற விரும்புகிறீர்களா?

அப்படியானால் இந்தியாவிலேயே இந்தியர்களாலேயே செய்யப்பட்ட இந்திரிய வஸ்துக்களடங்கிய இயற்கை உரங்களை வாங்கி உபயோகியுங்கள்.

நாங்கள் எலும் புத்தூள், ஜவ்வு, கொம்பு சீவல், புண்ணாக்குகள் முதலிய சகலமான எருக்களையும் அந்தந்தப் பயிர்களுக்குத் தக்க எருக்களைக் கலந்தும் தயாரித்தும் விற்கிறோம்.

இயற்கை உரங்களைச் சேர்க்காமல் தற்காலம் அதிக அட்டகாசப்படுத்தி விற்கும்செயற்கை உரங்களாகிய உப்பு உரங்களைத் தனியாய் உபயோகித்தால் கெடுதல் சம்பவிப்பதைப் போலல்லாமல் எங்கள் இயற்கை உரங்களால் எப்போதும் நன்மையே உண்டாவதோடு நிலவளமும், நாளுக்கு நாள், வாரத்திற்கு வாரம், மாசத்திற்கு மாசம் வருஷத்திற்கு வருஷம் அபிவிருத்தியடையும் என்பதில் சந்தேகமேயில்லை.

விலை முதலிய விவரங்களறிய விரும்புவோர்.—

ஏ.ஜெ.ரோட்ரிக்ஸ் அண்ட்கோ

ஏஜண்ட் கடம்பூர் எருக்கிடங்கு

கடம்பூர் (S I- R-)

என்று எழுதி முழு விவரங்களறியலாம்

---

## இந்திய விவசாயம

ஓர்விவசாய மாதப் பத்திரிகை

வருட சந்தா ரூ- 1

இதில் கமத்தொழில், கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, சிறு தொழில்கள் முதலிய கிருஷிகருக்கு வேண்டிய சகலவிஷயங்களும்பிரதிமாதமும்வெளிவரும் [தனிசஞ்சிகை அணு ஒன்றரை]

மானேஜர்—இந்திய விவசாய ஆபீஸ்

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி,

---

## கம்மபாலன்

தமிழ் மாதப்பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. கிராமவாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருடசந்தா ரூ. 1 தான்

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தகபாரங்கள் எம்மிடம் கிடைக்கும்:

ஆர்- வெங்கடசாமி நாயுடு

பத்திராதிபர் கம்மபாலன்

திருத்தாங்கல்

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to*
*Agriculture and its allied subjects*

# கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

| | | |
|---|---|---|
| Vol XII | 1929ம் ஸு மேமீ 14உ | No 2 |
| புத்தகம் 12 | சுக்லஸு வைகாசிமீ 1உ | பிரதி. 2 |

## Facts which ryots should consider in manuring
## கிருஷிகர் எருவிடுவதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள்

ஒரு கிருஷிகன் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் தனக்கிருக்கப்பட்ட நிலத்தைக் குறித்துத்தான். ஏனென்றால் இதுவே கிருஷித் தொழிலுக்கு ஒரு முக்கிய ஆதாரமென்று சொல்லவேண்டும். நிலத்தை சீர் திருத்தி உரப்படுத்துவதினால் தான் கிருஷித் தொழில் விருத்தியடைகிறது. கிருஷிகரும் அதனால் லாபமடைகிறார்கள். நிலத்திற்கு நிலம் மண் வித்தியாசப் படுகிறதென்பது சாதாரணமாய் எல்லாக் கிருஷிகருக்கும் தெரிந்த விஷயமே. ஒரு கிராமத்திலேயே சில நிலங்கள் அதிக மாசூலைத் தராவிட்டாலும் முதல் தரமான தான்யங்களை உண்டுபண்ணுகின்றன. சில நிலங்களுக்கு கொஞ்சமாய் உரம் போட்டாலும் நல்ல பலனைக் கொடுக்கின்றன. சில நிலங்களில் எவ்வளவு உரம்போட்டாலும் யாதொரு பலனையும் தருகிறதில்லை. சில நிலங்களை ஆழமாக உழவேண்டியிருக்கிறது. இன்னும் சில நிலங்களை ஆழமாய் உழுதால் அதில் பயிர்பிடிக்காமல் கெட்டுப்போய் விடுகிறது. மேற் சொன்ன வித்தியாசங்களுக்குத் தக்க காரணம் கண்டுபிடித்து கிருஷி செய்வதுதான் சாஸ்திர சம்மந்தமான விவசாயம் என்பது. இவ்விஷயங்களை ஆராய்ச்சி செய்யும் போது அனேக விஷயங்கள் தெரிகின்றன. அதாவது நிலத்தில் கழிப்பு கொடுக்கக் கூடிய அம்சங்கள் மணல் எவ்வளவு பாகம் கலந்திருக்கிறது, இந்திரிய வஸ்து வென்று சொல்லும் ஹியூமஸ் எவ்வ

ளவு பாகமிருக்கிறது, சுண்ணும்புச் சத்து எவ்வளவு பாகம் இருக்கிறதென்பதைப் போலொத்த விஷயங்கள் கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. இத்துடன் முக்கிய பயிருணவு சத்துக்கள் எவ்வளவு என்னஸ்திதியிலிருக்கிற தென்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். இப்படித் தெரிந்த பின் எந்தெந்த சத்துப் பொருள்கள் குறைச்சலாயிருக்கின்றனவோ அச்சத்துப் பொருள்களை நிலத்திலிட்டால் அப்பேர்ப்பட்ட நிலம் தக்க பலனையும் இலாபத்தையும் கொடுக்குமென்பதில் யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. மேல் சொன்ன பிரகாரம் எல்லா விஷயங்களையும் சரியானபடி கவனிக்காமல் நாம் ஒருவர் சிபார்சு செய்யும் உரத்தை வாங்கிப்போட்டால் நல்ல பலன் கொடுத்து விடு மென்று எண்ணுவது சுத்த பிசகான எண்ணம்.

நில சம்மந்தமான ஆராய்ச்சிகள் மூன்றுண்டு. அதாவது (1) கெமிகல் என்று சொல்லும் ரசாயன பரீட்சை (2) மெகானிகல் என்று சொல்லும் ஸ்தூல விபாகமும் அவைகளின் குணாகுணங்களும் (3) பயலாஜிகல் என்று சொல்லும் அணுக்கிருமிகள் போலொத்த ஜீவ சம்மந்த மானவைகளின் வேலையைக் குறித்தது. இம்மூன்றும் ஒன்றோடொன்று சம்மந்தப்பட்டவைகளே யல்லாமல் சம்மந்தப்படாதவைகளல்ல,

பயிர் செழிப்பாய் வளர்ந்து நல்ல பலனைக் கொடுப்பதற்கு வேண்டிய பயிருணவுகளாகிய நைட்ரஜன் என்ற தழைசத்து, பாஸ்பாரிக் ஆசிட் என்ற தான்ய சத்து, சுண்ணும்பு போன்றவைகள் பயிர்களின் வேர்களின் வழியாய் நிலத்திலிருந்து பயிருணவாக கிரகிக்கப்படுகின்றன. பயிருணவு சத்துக்களின் சோதனையில் மேல்கூறிய சத்துப் பொருள்கள் ஒரு நிலத்தில் எவ்வள விருக்கின்றன வென்பதையும் இவைகளுக்குள் ஒன்றுக்கொன்று உள்ள சம்மந்தா சம்மந்தத்தின் அளவையும், மேல்சொன்ன வைகள் உடனே உணவாகக்கூடியஸ்திதியிலிருக்கிறதா அல்லது தாமதத்தில் உணவாகக்கூடியதாக இருக்கிறதா வென்பதைக் கண்டு பிடிப்பதுதான் ரசாயன சாஸ்திர ஆராய்ச்சி யென்பது: இப்படிச் சோதனைசெய்து பார்த்து அந்நிலத்தில் பயிருக்குவேண்டிய உணவுப் பொருள்களிருக்கிற தென்று தெரிந்து கொண்டால் அந்நிலம் ரஸாயன வளமுள்ளதென்று மாத்திரம் தெரிந்து கொள்ளலாம். இம்மாதிரியிலேயே ஒரு நிலத்திலுள்ள உணவுப்பொருள்களை எவ்வளவு அந்நிலத்தில் நிலை நிறுத்தக்கூடிய சக்தி

அந்நிலத்திற்கு இருக்கிற தென்பதும் செழிப்பு செழிப்பின்மை முதலியவைகளுக்குக் காரணங்களும், களர்,சவுடு முதலிய தோஷங்களுண்டா வென்றும் அவைகளைத் திருத்தவேதுக்களிருக்கிறதா வென்பதைப் போலொத்த விஷயங்களும் ரசாயன பரீட்சையால் தெரிந்து கொள்ளக்கூடும்.

ஒரு பயிருக்கு உணவுப்பொருள் எவ்வளவு அவசியமோ அதைப்போல் ஜலமும் அவ்வளவு அவசியம். அந்த ஜலம் பயிர்களால் முக்கியமாய் நிலத்திலிருந்தே கிரகிக்கப்படுகிறதாலும் பயிர்க்கு வேண்டிய அளவு ஜலம் எவ்விதமிருக்கவேண்டு மென்பதையும் முக்கியமாய் கவனிக்க வேண்டியதவசியம். நிலத்திற்கும் ஜலத்திற்கும் உள்ள சம்மந்த விஷயம் அந்நிலத்தில் உழவுகொடுத்தல், முதலியன போன்ற மண்பண்படுத்தலைப் பொருத்திருக்கும். எவ்வளவுக் கெவ்வளவு ஒரு நிலம் நன்றாய் உழுது செய்நேர்த்தி செய்யப் படுகிறதோ அதற்குத் தக்க அளவு ஜலமும்காற்றும் அந்நிலத்தில் பிரவேசித்துப் பரவி பயிருக்கு உபயோகப்படும். இத்துடன் மேல் சொன்ன காரணங்களால் பயிருக்கு வேண்டிய சீதோஷ்ணத்தையும் பயிருக்கு வேண்டிய அளவு அந்நிலத்திற்கு கொடுக்கும். மெக்கானிக்கல் அல்லது பிஸிகல் என்று சொல்லும் ஸ்தூல விபாகப் பரிட்சை இவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ள இடம் கொடுக்கும். அதாவது மண்ணின் பாகங்களாகிய மணல், மக்கின இந்திரிய வஸ்துவென்றும் ஹியூமஸ், வண்டல், களிப்பு, சாள், போன்ற பாகங்களை ஸ்தூலமாகப் பிரித்துப் பார்த்தால், இந்தஸ்த்தூல விபாகத்தில் நிலம் சரியான நிலமையிலிருந்தால் இயற்கையில் வளமுள்ள சுபாவமுள்ளது, அல்லது இல்லாததென்று அறிந்து கொள்ளக்கூடும்.

ஒரு நிலத்திற்கு நாம் போடும் உரம் ஸ்தூலமாக வாவது அல்லது ரசாயன மாறுதல்கள் மூலியமாயாவது பயிருக்கு உணவாக மாற்றப்பட வேண்டும். அப்போதுதான் பயிர்களுக்கு வேண்டிய போதுமான உரமும் செல்லும் பயிர்களும் கிரகிக்கும், ஒரு எருவை லேசாய் தண்ணீரில் கரைத்துப் பயிர்கள் அருந்தக் கூடிய ஸ்திதியில் கொண்டு வருகிற காரியம் தொழிற் சாலையில் திராவகங்கள் முதலியவைகள் சேர்த்து எம்மாதிரி நாம் செயற்கையில் செய்கிறோமோ அப்படி இயற்கையில் மண் என்கிற தொழிற் சாலையில் இலக்ஷக் கணக்காகச் சிற்றுயிர்களின் வேலையால் சதா நடந்து கொண்டு வருகிறது. இவைகள் இடைவிடாமலு

ஓயாமலும் வேலை செய்து கொண்டிருக்கின்றன. இச்சிற்றுயிர்களால் நிலத்திலுள்ள இந்திரிய வஸ்துக்கள் பயிருக்கு வேண்டிய உணவாக மாற்றப்படுகிறது. வேறொரு விதமான சிற்றுயிர்கள் காற்றில் ஏராளமாயுள்ள நைட்ரஜன் என்னும் தழைசத்தைப் பயிருணவாகக் கூடிய நிலைமையில் நிலத்தில் சேர்க்கின்றன. வேறு சிலசிற்றுயிர்களோ பயிரிடுவதற்கே முற்றிலும் விரோதமாயிருக்கின்றன. இச்சிற்றுயிர்களின் விசேஷ சாதகம் என்னவெனில் நிலத்தை எவ்வளவுக் கெவ்வளவு உழவு முதலியன கொடுத்து பக்குவப்படுத்துகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு ஜாஸ்தியாகிறது, அத்துடன் ஒரு நிலத்தில் எவ்வளவுக் கெவ்வளவு இந்திரிய வஸ்துக்களடங்கிய எரு சத்துப்போன்ற ஹியூமஸ் ஜாஸ்தியாயிருக்கிறதோ அப்பேர்ப்பட்ட நிலங்களில்தான் இச்சிற்றுயிர்களும் ஜாஸ்தியாய் பல்கிப் பெருகி ஓயாமல் வேலை செய்து பயிர்களுக்கு சுலபத்தில் கரையக் கூடிய விதமாய் சில உரச்சத்துகளை மாற்றுகின்றன. இக்காரணத்தால்தான் தனிஉரச்சத்துக்களாகிய தழைசத்து உரங்களாகிய சல்பேட் ஆப் அம்மோனியா நைட்ரேட் ஆப் சோடா முதலிய உரங்களை மாத்திரம் உபயோகிப்பதில் பலன் ஜாஸ்தி கிட்டமாட்டாதென்றும் இந்திரிய வஸ்துக்களடங்கிய எருக்களைச் சேர்த்து அவைகளுடன் உபயோகிக்கா விட்டால் தக்கபலன் கிடைக்க மாட்டாதென்றும் நாம் அடிக்கடி எழுதுவதின் காரணம் மேல் கூறிய மூன்று விதங்களையும் அதாவது ரசாயனக் கூறுபாடுகளாலும் ஸ்தூல விபாகக் கூறுபாடுகளாலும், அணுக்கிருமிகள் சம்மந்தமான விஷயங்களைத் தெரிந்து கொண்டு அந்தந்த நிலத்திற்குத் தக்கபடி எருச்செய்து பயிர் செய்தற்கே சாஸ்திர சம்மந்தமாய் செய்யும் விவசாயம் என்று சொல்லக்கூடும்,

பயிருணவு சத்துக்களாகிய நைட்ரஜன் (தழைசத்து) பாஸ்பாரிக் ஆசிட் (தான்ய சத்து) பொட்டாஷ் (தாள்சத்து) இவைகள் உடனே பயிருணவாகும் பொருட்டு தண்ணீரில் கரையக் கூடிய விதமாக யிருக்கவேண்டுமென்பது விவசாய ரசாயன சாஸ்திரிகளின் கொள்கை. இப்படி உபயோகப் படுவதில் மேற்கூறிய சத்துக்கள் அதிக மழையினால் தண்ணீரில் கரைந்து நஷ்டமாய் விடுமென்று அனேகர் எண்ணுகிறது சகஜம். இதன் உண்மை எப்படி என்று தெரிந்து கொள்வது அவசியம், தான்ய சத்தாகிய பாஸ்பாரிக் ஆசிட் என்ற உரச்சத்து நிலத்தில்போட்டு மண்ணோடு கலந்து விட்டால் மண்ணிலுள்ள இந்திரியவஸ்து தாதுப் பொருள்கள் முத

சியவைகளுடன் சேர்ந்து விடுவதால் அதன் பெரும் பாகம் மண்ணி லேயே இருக்குமே ஒழிய தண்ணீரில் கறைந்து அவமாகிப்போகாது. அதேமாதிரி போட்டாஷ் என்ற தாள் சத்தும் மண்ணிலுள்ள வஸ்து க்களோடு சேர்ந்து மண்ணை விட்டுப் பிரிக்கக்கூடாத நிலைமையிலிரு க்கும். இதற்குச் சகாயமாக நிலத்திலேயே பயிர்கள் வேர்கள் இற ங்குகிற ஆழத்தில் பாஸ்பாரிக் ஆஸிட் என்ற தான்ய சத்தையும் போ ட்டாஷ் என்றதாள் சத்தையும் சேகரித்து வைத்துக் கொள்ளக் கூடிய சாதகம் நிலத்திலிருக்கிறது. இதனால் மேற்சொன்ன இரண்டு சத்துக்களும் எந்தக்காலத்திலும் எவ்வளவு போட்டாலும் நிலத் தின் மண்ணையே வெட்டி அப்புறப் படுத்தினலொழிய தண்ணீரில் கறைந்து நஷ்டமாகாமல் பயிர்களுக்கு உணவாக உபயோகப் படுமெ ன்பதில் யாதொரு சந்தேகமுமில்லை, ஆனால் நைட்ரஜன் என்னும் தழைசத்தோ அப்படியல்ல, காற்றிலிருந்து நைட்ரஜன் சத்தை கிரகிக் கக்கூடிய பயிர்களாகிய கோதுப்பயிர் தினுசுகளாகிய மொச்சை, பயறு, காராமணி போன்ற பயிர்கள் தவிர மற்ற எல்லாப் பயிர்களும் நைட்ரஜன் சம்மந்தப் பட்ட உரங்களை எந்த நிலைமையில் உபயோ கித்தபோதிலும் அவைகளை நைட்ரேட் டென்று சொல்லும் உப்பாக மாற்றித்தான் உணவாக அருந்தக்கூடும். நைட்ரேட் ஆப் சோடா நைட்ரேட் உப்பானதால் தண்ணீர்மிதமாயிருந்தால்தான் உடனே உண வாகி உபயோகப் படுத்தப்படும். ஆனால் சல்பேட் ஆப் அம்மோனி யாவோ நிலத்தில் மக்கி நைட்ரேட் ஆகமாறினபின்தான் உணவாகும், இதேமாதிரிதான் புண்ணுக்குகளும் மற்ற இந்திரிய வஸ்துக்கள டங்கிய எருக்களும்-இந்த நைட்ரேட்டாய் (கரையக்கூடிய உப்பாய் மாற்றும் குணம் சில அம்சங்களைப் பொருத்திருக்கிறது. அதிக ஜலம் அதிக சீதளம் போன்றவைகள் நிலவளத்திற்கே முற்றிலும் விரோத மானவைகள். தண்ணீர் ஏராளமாயிருக்கும்பொழுது காற்றிலுள்ள பிராணவாயுவும் மண்ணுக்குள் பிரவேசிக்கத் தடை படுமாதலால் நை ட்ரிபிகேஷன் என்று சொல்லும் சுலபமாய் கரையக்கூடிய உப்பாய் மாற்றும் குணமும் செய்கையும் தடைபடுகிறது. அதிக ஜலம் இந்த மாறுதலை தடுப்பதோடு ஏற்கனவே நிலத்தில் நிற்கும் நைட்ரேட் என்னும் கறையக்கூடிய உப்பைக்கரைத்து வேர்களுக்கு எட்டாத அடிமண்ணிலாவது அல்லது அடுத்தாப் போலிருக்கும் பள்ளத் தாக்குகளுக்காவது அடித்துக்கொண்டு போகப்படுகிறது, இம்மா திரி நைட்ரஜன் என்னும் தழை சத்து நஷ்டப்படும். இதற்காகத்தான்

சிலர் சாகுபடி தோறும் உடனே உணவாக மாறக்கூடிய உரங்களை உபயோகிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள்.

பூமியின் செழிப்புக்கு வேண்டிய அனேக குணங்களில் ஒவ்வொன்றும் பூர்த்தியாயிருக்காவிட்டால் பிரயோஜனமில்லை. சில மாத்திரம் ஒத்திருந்து மற்றது வித்தியாசப்பட்டால் என்ன எருவிட்டாலும்பூமி சரியான பலன் கொடுக்காது, நிலத்துக்குத் தக்கபாய்கால், வடிகால், வசதி இல்லாவிட்டாலும் தண்ணீர் கொஞ்சம் தட்டானாலும் பயிருக்கு வேண்டிய உஷ்ணத்தையும் காற்றையும் தாராளமாய் எடுத்துக் கொள்ளக்கூடாதபடி வயலில் ஜாஸ்தி தண்ணீர் தங்கியிருந்தாலும் அப்பேர்ப்பட்ட வயல்களுக்கு எவ்வளவு உரம் போட்டாலும் பிரயோஜனப்படாது. உரக்கிறயத்திற்கு தக்கபலனும் கிடைக்காது. இந்திரிய வஸ்து இருக்கும் நிலங்களில் வடிகால் வசதியும் காற்றோட்டமும் சாதாரணமா யிருக்கும். அப்படிக்கில்லாத இடங்களுக்கு இந்திரியவஸ்துக்களடங்கிய எருக்களைச் சேர்த்தாலும் அவைகள் சீக்கிரத்தில் நல்ல ஸ்திதியடைந்துவிடும்.

இக்காரணத்தால் தான் நிலத்தில் மக்கிய இந்திரியவஸ்து போதுமான அளவு இல்லாத வயல்களுக்கு வேறு எவ்வளவு எரு போட்டாலும் தக்கபலன் கொடுக்க மாட்டாது இவ்விந்திரிய வஸ்து இல்லாத இடங்களில் முதல்தரமான விசேஷ செயற்கை எருக்கள் போட்டும் பயனில்லாமல் போயிருக்கிறதாக அனேக பரீக்ஷார்த்தப் பண்ணைகளில் (இத்தேசத்திலும் அயல்தேசங்களிலும்) நடத்தியிருக்கும் பரீட்சைகளால் நன்று புலப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தை நன்றாய்த் தெரிந்து கொள்ளாமல் அனேகர் செயற்கை உரங்களைமாத்திரம் வாங்கி உபயோகித்துப் பார்த்து அவைகளால் பயனடையாமல் உரங்களைக் கெட்ட சரக்குகள் என்று குறை கூறுவதுண்டு. ஆகையால் ஒவ்வொரு கிருஷிகனின் முதல் கடமை என்னவென்றால் தங்களுடையநிலங்களுக்கு ஏராளமாய்மக்கினதான எரு, அகப்படக்கூடிய தொழு எரு, குப்பை கூளம் முதலியவைகளை உபயோகித்து அப்பால் இயற்கை எருக்களுடன் செயற்கை எருக்களையும் சேர்த்து உபயோகித்தால் பலன் அடைவார்களென்பதில் சந்தேகமில்லை. கிருஷிகர்களே! இனியாவது நீங்கள் ஜாக்கிரதைப் பட்டு சீனதேசத்து விவசாயிகளைப் போல உங்களுடைய குப்பைதழை போன்ற எருக்களைச்சேர்ப்பதில் கவனம் செலுத்தி உபயோகித்து பலனடையுங்கள்

## When Cows should be taken for Bull service

### பசுக்களை எப்போது பொலிய விடக் கொண்டு போகவேண்டும்?

தற்காலத்தில் சிலர் பொலிக் காளைகளை வைத்து பராமரித்துக் கொண்டு வருகிறார்கள். விவசாயச் சங்கங்களும் இக்காளைகளைவைத்துக்கொண்டிருக்கிறார்கள். சில ஜில்லா போர்டுகளும் மாப்பிள்ளை காளைகளை வாங்கி ஜனங்களின் உபயோகத்திற்காக ஸ்தாபித்திருக்கிறார்கள். இன்னும் சிலர் இவைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்ற ஊக்கமெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அனேக கிருஷிகர் தங்கள் பசுக்களைச் சரியான காலங்களில் மாப்பிள்ளை காளைகளிருக்கு மிடத்திற்குக் கொண்டு போவதில்லை என்று தெரிய வருகிறது, இக்காரணத்தால் ஆங்காங்கு வைத்திருக்கும் எருதுகள் பசுக்களை பொலிகிறதில்லை: அதவா பொலிந்தாலும் சினை சரியானபடி நிற்கிறதில்லை. ஆகையால் சரியான காலத்தில் பசுக்களைக் கொண்டு போகாத குற்றம் குடியானவர்களையே முக்கியமாய் பொருத்திருக்கிறது. பொலிகாளைகளை பிரயோஜன மற்றது என்று சாதாரணமாய் குற்றஞ் சாட்டுவது அனேகமாய் சரியல்ல. பொலிகாளைகளை மாட்டுமந்தைகளில் சுய இச்சையாய்த் திரிய விடும்போது ஒருபசு பொலிப்பில் வரும்போது காளை தாவுவதால் அதைப்பற்றி ஒருவரும் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் விவசாய டிபார்டுமெண்டாரும் ஜில்லாபோர்டு சங்கங்களும் மற்றும் சில முக்கிய மிராசுதார்களும் ஆங்காங்கு வாங்கி வைத்திருக்கும் பொலிகாளைகளிடத்தில் கொண்டுபோய் தங்களுடைய பசுக்களைத் தாவவிட்டு அதன் மூலியமாய் வர்க்க விருத்தி செய்ய வேண்டுமென்ற விருப்பமுடைய கிருஷிகர் சரியானபடி கவனித்து பசுக்கள் சரியான பொலிப்பிலிருக்கும் போது கொண்டு போக வேண்டியது அவசியம். சரியான பொலிப்பின் அடையாளங்கள் இதனடியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவைகள் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் பொருந்தும்.

சரியான பொலிப்பு அடையாளங்கள்:—பசுக்கள் பொதுவாய் அமைதியிராமலிருத்தலே அவைகள் பொலிப்பிலிருக்கிறதென்பதற்கு முதல் அடையாளம். பசுக்கள் கட்டப்பட்டிருந்தால் அவைகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு மாறிக்கொண்டேபோகும், காதுகளை ஆட்டிக் கொண்டும், தலையை எப்போதை விட ஜாஸ்தி உயர்த்திக் கொண்டும் இருக்கும்: மிரண்ட பார்வையுமிருக்கும், வழக்கத்தை விட சற்று அதிகமாய்க் கத்தும், வாலை அடிக்கடி ஆட்டிக் கொண்டு

வாலின் பக்கம் கொஞ்சநேரத்திற்கு ஒருதரம் பார்க்கும். இவ்வடையாளங்கள் மாடு பொலிப்புக்கு வருவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் தோற்றப் பட்ட அடையாளங்கள். சரியான பொலிப்பில் மாடு வந்த உடன் மேற்சொன்ன அடையாளங்களெல்லாம் ஜாஸ்தியாய்க் காணப்படும். மாடுகள் கட்டப்பட்டிருக்கும் போது அடிக்கடி மாமூலாய்கத்தும் கத்தலைப் போலல்லாமல் சற்று நீண்ட கத்துதலுடன் சத்தமிடும்.

பசுக்கள் சுயேச்சையாய்த் திரியும்போது மேயாமலும் ஒரு பக்கத்தில் நிற்காமலும் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருக்கும். தன் சமீபத்திலுள்ள இதர மாடுகளைத் தலையால் முட்டிக்கொண்டும் வேறு விதமாய் ஹிம்சித்துக் கொண்டுமிருக்கும். பூரா பொலிப்பில் வந்த உடன் மற்றப் பசுக்களின் மேல் ஏறுவதுடன் இதர மாடுகளைத் தன் மேலும் ஏறவிடும்: மாடுகள் சுயேச்சையாய்த் திரியும்போதும் கட்டப்பட்டிருக்கும் போதும் காணும் அடையாளங்களை ஒப்பிட்டுப்பார்த்தால் சுயேச்சையாய்த்திரியும் போது இதர பசுக்களின் மேல் ஏறுவதும், இதர பசுக்களைத் தன்மேல் ஏற விடுவதும் கட்டப்பட்டிருக்கும்போது கத்துவதுமே முக்கிய அடையாளங்களாய்க் கருதவேண்டும், பொலிப்பிலிருக்கும் போது சில பசுக்கள் சுத்தமாய் பால்கொடுக்காமலிருப்பதும் வேறு சில கொஞ்சமாய்ப்பால் கொடுப்பதும் அடையாளங்களாகும். பசுக்கள் சரியான பொலிப்பு நேரம் சமீபிக்கும்போது பசுக்களின் அரையிலிருந்து பிசுபிசுப்பும் சுத்தமானதுமான நீர்வடியும், அநேகமாய் இதை முதலில் பார்த்தபோதிலும் மாடுகள் பொலிப்பில் வந்த சில மணி நேரங்களுக்கெல்லாம் வாலின் பக்கத்திலும் அரையின்மேல் பக்கத்திலும் மேல் சொன்ன பிசுபிசுப்பான நீர் அடையாளம் காணப்படும். அரையின் கீழ் பக்கத்தில் இந்நீர் காய்ந்தபின் துண்டுகளும் காணப்படும். இன்னமும் கவனித்துப் பார்த்தால் மாட்டின் பின் கால்களில் நீர் இந்த துளிதுளியாய் விழுந்து காய்ந்து போன அடையாளங்களும் காணப்படும்: பொலிப்பில் வருவதற்கு சற்று முன்னும் பொலிப்பிலிருக்கும் போதும் அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாய் மூத்திரம் விடும்; பசுக்கள் பொலிப்பிலிருக்கும் போது அதன் அரை விம்மியும் சற்று வீங்கியும் அரையின் இரண்டு பக்கங்களும் எப்போதும் போல் நெருக்கமாய் சேர்ந்து மூடப்பட்டிருப்பதைப்போலல்லாமல் சற்று விரிந்திருப்பதாகவும் வெளிப்பக்கம் மடங்கியிருப்பதாகவும் தெரியும்.

## கன்று போட்டபின் முதல் பொலிப் பெடுத்தல்

பசுக்கள் கன்று போட்ட மூன்று மாதங்களுக்கப்பால் முதல் தரம் பொலிப்பில் வரும். ஆனால் வழக்கத்தில் பொதுவாக இது அவ்வளவு சரியான கணக்கென்று சொல்வதற்கு இடமில்லை. ஆகையால் நான் மேல் குறித்திருக்கும் அடையாளங்களைக் கவனிக்க வேண்டிய அவசியம் நேரிடுகிறது. திருஷ்டாந்தமாக ஒரு பசு கன்று போட்ட ஆறுமாதங்கள் வரையில் பொலிப்பில் வந்ததாகக் காணப்படாமலிருக்கலாம். இருந்தாலும் இதுமுதல் பொலிப்பாகவும் முன் கவனிக்கப்படாததால் இரண்டு அல்லது மூன்றாவது பொலிப்பாகவுமிருக்கலாம். மேற்சொன்ன அடையாளங்கள் ஆரம்பித்த 24 மணி நேரம் வரையில் மாடுகள் பொலிப்பிலிருக்கும். பசுக்களை அந்தக் காலத்துக்குள் பொலிய விட வேண்டும்.

பசுக்கள் ஒருதரம் பொலிப்புக்குவந்து பொலிப்புமாறினால் நல்ல ஜாதி மாடுகளாயிருந்தால் 21 நாட்களில் மறுபடியும் பொலிப்புக்கு வரும். இக்காலங்கள் தவிர்த்து மற்ற நினைத்த நேரங்களில்பசுக்கள் பொலிப்பில் வந்தாலும் 4,5 வாரங்கள் அல்லது 2, 3 மாதங்களிலஒரு தரம் பொலிப்பில் வந்தாலும் அனேகமாய் அம்மாடு சினைப்படாததென்பதற்கு ஒரு அறிகுறியாகும். காலந்தவறி வரும்போது அவை மூன்று வாரங்களின் இரட்டிப்பு அல்லது மூன்று பங்கு காலமாகிய 6 அல்லது 9 வாரங்களின் இடையாவென்பதைக் கவனிக்க வேண்டும்: ஏனெனில் அதற்கு முந்திய வாரங்களில எந்த பொலிப்பைக் கவனியாதிருந்திருக்கலாம்.

பொலிந்தபின் மறுபடியும் பொலிப் பெடுத்தல், சில சமயங்களில் மாடுகள் பொலிந்த 21 நாட்களுக்குப் பின்னுங்கூட அல்லது வேறு காலங்களிலாகிலும் பொலிப்பில் வரலாம். முன் குறிப்பிட்டவை இன்னொருதரம் பொலிந்தபின் சினையாகலாம்.

ஆனால் நினைத்த நேரத்தில் பொலிப்பெடுக்கும் பசுக்களை மறுபடியும் பொலியவிட்டாலும் அவை சினைப்படுவது சந்தேகம். மாடுகள் பொலிந்த 19 முதல்22வது நாள்வரையில அவைகள் மறுபடியும் பொலிப்பில் வருகின்றனவாவென்பதைக் கவனித்துப் பார்க்கவேண்டும். 3வாரங்களில் அல்லது நினைத்தபோது பொலிப்பெடுத்தால் சினை விசிறி விட்டதென்றாகிலும் அல்லது வேறு காரணங்களால் சினைப்படவில்லையென்றாவது சந்தேகப்பட வேண்டும். பல முறை பொலிப்பெடுத்து விட்டும் பொலியவிடாதிருந்தால் அப்பேர்ப்பட்ட பசுக்

கள் அதிகமாய் கொழுத்திருக்கின்றனவா வென்று பார்த்து, கொழுத்திருந்தால் அப்பேர்ப்பட்ட பசுக்களுக்கு ஆகாரத்தைக் குறைத்துக் கொடுத்து கொழுப்பைக் குறையும்படி செய்து, பின் பொலிப்புக்கு வந்தபின் பொலிப்புக்கு விடவேண்டும்.

அதிலும் பொலிப்பு நிற்காவிட்டால் அப்பால் ஏரில் கட்டியும் கவலையில் கட்டியும் வேலை வாங்கி வந்தால் நாளடைவில் ஒருக்கால் பொலிப்பு நிற்கும்.

சினை நிற்கவில்லையென்று அடிமாட்டுக்காரருக்கு சகாயமாய் விற்று விட்ட ஒரு பசுவை நாம் வாங்கி மேற்சொன்னவாறு செய்ததில் கன்று போட்டு நல்ல பால் கறந்தது. ஆனால் மறுபடியும் அது சினைப்படவில்லை.

அப்பேர்ப்பட்ட பசு ஒன்று இப்போதும் நமது ஜெகந்நாதபாக் தோட்டத்தில் பெரிய எருதுக் கொப்பாகவும் ஏர் இழுப்பதையும், கவலையடிப்பதையும் பார்க்கலாம்.

## Experiments conducted by the Agricultural Department on Ensilage

## விவசாயடிபார்டுமெண்டார் குழிகளில் தீவனத்தைச் சரித்து பந்தோபஸ்த்து செய்து வைத்துப் பரீட்சை செய்த விவரம்

1926-27 வருஷத்தில் ஒசூர் (Hosur) கால்நடைப் பண்ணையில் ஏறக்குறைய 383 டன் (1 டன் 2240 ராத்தல் அல்லது 2 வண்டி பாரம்) நிறையுள்ள பில்லு, சோளத்தட்டை, முதலிய தீவனப் பயிர்களை குழிகளில் போட்டு வைத்து பந்தோபஸ்து செய்து பார்த்ததில் 100க்கு 81 பாகம் அந்த தீவனம் நல்ல பக்குவமான சாக்காய் 3 முதல் 6 மாதங்களுக்குள் கிடைத்தது.

1927-28ம் வருஷத்தில் அதே பண்ணைகளில் இவ்விஷயத்தைக் குறித்துப் பரீட்சைகள் நடத்தி ஆராய்ச்சி செய்ததில் தண்ணீர் பாசன வசதிகளுள்ள இடங்களில் யானைப்புல் என்று சொல்லும் எலிபண்ட் கிராஸும், கினி கிராஸ் என்று சொல்லும் கினியா தேசத்துப் புல்லும், பயிர் செய்து கால்நடைகளுக்குத் தீவனமாய் உபயோகப்படுத்துதல் லாபகரமென்று தீர்மானிக்கப்பட்டது. பாலூர் விவசாயப்பண்ணையில் காக்கா சோளம் தீவனத்திற்காக அப்பிராந்தியத்துக்கு சாகுபடி செய்வது இலாபகரமென்று தீர்மானித்தார்கள். ஒசூர் கால்நடைப்பண்ணையில் கொழுக்கட்டைப்புல் சாகுபடி செய்வது அப்பிராந்தியத்தில் புஞ்செய் நிலங்களுக்கு சிலாக்கியமானதென்று தெரிந்து கொள்ளப்பட்டது.

தாளிப்பரம்பா விவசாயப் பண்ணையில் 9டன் காட்டுப்புல்லும் 8 டன் சோழ தாத்தும் குழிகளில் போட்டு பந்தோபஸ்து செய்து பரீட்சை செய்ததில் சென்ற வருஷத்தில் பந்தோபஸ்து செய்ததைப்போல் அவ்வளவு நல்லதீவனமாய் அமையாமல் போனாலும் மாடுகள் அதை வெயில் காலத்தில் சாதாரணமாய் உபயோகப்படுத்தினதாகத் தெரிகிறது.

சிந்தலதேவி கால்நடைப் பண்ணையில் நான்கு குழிகளில் தீவனம் பந்தோபஸ்து செய்து பார்த்தார்கள். 15,765 ராத்தல் நிறையுள்ள மக்காசோளம், சோளம், சாதாரண புல், முதலியவைகள் போட்டு பந்தோபஸ்து செய்து உபயோகப் படுத்தப்பட்டது.

குண்டூர் பண்ணையில் இரண்டு குழிகளில் தீவனம் பந்தோபஸ்து செய்து பரீட்சை செய்தார்கள். ஒன்றில் சடம்புத்தாளும், மற்றொன்றில் சோளத்தட்டையும், கோயம்புத்தூர் விவசாயப் பண்ணையில் 38908 ராத்தல் சோழதாத்தும், 3513 ராத்தல் சடம்பும் பந்தோபஸ்து செய்து உபயோகப் படுத்தப்பட்டது. இப்பரீட்சைகளிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் விஷயம் என்னவென்றால், அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி தீவனம் உண்டாக்கி அதை வெயில் காலங்களில் செலவுசெய்து தண்ணீர் நிறைந்த சாகுபடி செய்து பச்சைத்தீவனம் உண்டு பண்ணி கால்நடைகளுக்கு உபயோகிப்பதற்குப் பதிலாய் மழை காலங்களிலும், சாலப் பருவகாலங்களிலும் ஜாஸ்தி இறைப்பு யில்லாமலும் கொஞ்ச செலவில் உற்பத்தி செய்யக் கூடிய தீவனப்பயிர்களை சாகுபடி செய்து அதை குழிகளில் பந்தோபஸ்து செய்து வைத்திருந்தால் வெயில்காலங்களில் கால்நடைகளுக்கு ஒரு நல்ல தீவனமாய் உபயோகிக்கக் கூடுமென்று தெரிகிறது. ஒரு விஷயம் ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டியது என்னவென்றால் குழிகள் வெட்டி தீவனம் பந்தோபஸ்து செய்யுமிடங்களில் குழிகளில் தண்ணீர்சுரக்கக்கூடாத இடமாய் இருக்கவேண்டும். இதுவன்றி போட்டு பந்தோபஸ்து செய்த குழிகளுக்குள் மழைத் தண்ணீர் போய் பாயக்கூடாத வண்ணமாயும் பந்தோபஸ்து செய்துவைக்கவேண்டும். இவ்விஷயங்களில் கவனம் செலுத்தி விட்டால் வேறு விஷயங்கள் அவ்வளவு முக்கியமானதல்லவென்றும் சாதாரண கிருஷிகர் கூட கையாடி சித்திபெறலாமென்றும் தெரிகிறது. இந்த விஷயத்தில் ஆங்காங்குள்ள கிருஷிகர் ஆங்காங்குள்ள பண்ணைகளில்(சர்க்கார்) செய்திருக்கிறதைப் பார்த்து கொஞ்சமாவது தாங்கள் கையாடி அவரவர்கள் அனுபவத்தைப் பத்திரிகை வாயிலாகத் தெரிவித்தால் மற்றவர்களுக்கும் அது ஒருதூண்டுகோலாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

## Correspondence

### கடிதம்

ஸ்ரீமான் பத்திராதிபர் அவர்களுக்கு

அன்பார்ந்த ஐயா,

தங்கள் பத்திரிகை 2437ம் நெம்பர் சந்தாதார் காங்கூர் ஜி. ஸ்ரீனிவாச ராகவாசாரியார் எழுதிக் கொண்டது எனக்கு வெகுநாளாக விவசாய விஷயங்களில் ஊக்கம் இருந்தும் ஏதோ வேறு காரியங்களால் இது விஷயம் சிரமம் எடுத்துக்கொள்ள அவகாசம் இல்லாமல் போய்விட்டது. தற்சமயம் நான் குடியிருக்கும் காங்கூர் கிராமத்திலும் இன்னும் சுற்றுப் பக்க கிராமங்களிலும் இருக்கப்பட்ட விவசாயிகள் அபிப்பிராயத்தை முன்னிட்டும் நான் வெகுநாளாக எதிர் பார்த்ததற்கு தற்காலம் வந்தபடியாலும் தங்கள் பத்திரிகை சந்தாதாராய்ச் சேர்ந்தேன். நானது சித்திரை மாதத்திய சஞ்சிகையை வாசித்துப்பார்த்ததும் தங்களுடைய பரோபகார சிந்தையைப் பற்றி ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன்.

இப்பரதக் கண்டத்தின்கண் எல்லாம் தெய்வச் செயலென்று தெய்வத்தின் பேரில் பழியைப் போட்டு விட்டு அவர் அவர்களால் இயன்றமட்டும் சிரமம் எடுத்துக்கொண்டு தங்களைப்போன்ற அரும் பெரும் கனவான்களைக் கலந்து விவசாயத்தை விருத்தி செய்து க்ஷேமமடைய விரும்பாதிருப்பவர்களுக்கு இம்மாதிரி தங்கள் பத்திரிகையை அனுப்பியும் அவர் அவர்கள் கேழ்க்கும் சந்தேகங்களைக் கொஞ்சமேனும் சிரமம் இல்லாமல் தீர்த்து இப்பரத கண்டத்தின் பெருமையை முன்னேற்ற மடையவிக்க வேண்டி சர்வேஸ்வரன் தங்கள்பேரில் கிருபைகூர்ந்து ஆயுள் விருத்தியையும் தேக வலிமையையும் புத்தி கூர்மையையும் தந்து ரட்சிப்பாராக.

1, நான் தற்சமயம் சுமார் ரூ 50 செலவழித்து சேலம் அப்துல் ரஹிமான்சாயபு அவர்களிடமிருந்து சில செடிகள் வரவழைத்து வைத்திருக்கிறேன். அவர் சொல்லியபடி ஒன்றரை கஜம் நீளம் ஒன்றரை கெஜம் அகலம் ஒன்றரைகெஜம் ஆழம் குழிகள் வெட்டி ஷை குழிகள் மேல் மண்ணும் குழியும் காய்ந்த பிறகு ஷை மண்ணையும், மணலையும், மக்கின தொழு எருவையும், குழிகளில் போட்டு மாஞ் செடிகள் வைத்தேன். எலுமிச்சன், மாதுளை, வகையறு ஒரு கஜம் அகலம் நீளம் ஆழம் குழிகள் வெட்டி, குழி காய்ந்தபிறகு மணல் 2 கூடை போட்டு, அதற்குமேல் வண்டல் மண் 2 கூடை போட்டு, அதற்குமேல் தொழு எரு 2 கூடை போட்டு மறுபடியும் அம்மாதிரியே போட்டு ஷை குழிகள் ஒரு அடி ஆழம் இருக்கும்படி தூர்த்து ஷை செடிகள் வைத்தேன், செடி வைக்குமுன் குழிக்கு நாலு குடம் தண்ணீர் கொட்டினேன். பிறகு வாரம் இருமுறை குழிக்கு இரண்டு குடமாத் தண்ணீர் கொட்டிக்கொண்டு வருகிறேன். அவைகளில் சுமார் 10 செடிகள் பட்டுப் போயிற்று இன்னும் இருக்கிற செடிகளும் வைத்து சுமார் ஒன்றரை மாதத்துக்குமேல் ஆகியும் விட்டது. துளிர் எடுக்கவில்லை

செடிகள் வைத்திருக்கும் நிலத்தின்மேல் மண் சுண்ணமென் அதாவது ஜலம் கொட்டும்போது அதிக நொர்ச்சிகொடுத்து மறுநாள் மேல்மண் பக்காக உலர்ந்து விடுகிறது. ஒன்றரை அடிக்கு கீழ் சுமார் இரண்டடியும் ஆழம் வரையில் கெட்டி பருக்கையாயிருக்கிறது. கொட்டின தண்ணீரை பூமிகிரஹிக்காமல் சதுசதுப்பாயிருக்கிறது. இப்படியிருக்க செடிகள் பட்டுச் செத்துப் போவதற்கும் துளிர் விடாததற்கும் காரணம் தெரியவில்லை. அவைகள் இனி எவ்விதம் செய்தால் நன்றாக வளரும் என்பதைத் தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

1. மேற்கண்ட செடிகள் மொத்தம் ஒட்டுச் செடிகள்.

2. ஒட்டுக்கு கீழ் துளிர்வந்தால் அதைத் தினந்தினம் கிள்ளியெறிந்து விடவேண்டுமா? அந்தப்படியே கிள்ளாமல் வளரவிட்டால் என்னகுற்றம்?

3. ஷை செடிகளுக்கு தண்ணீர் எவ்விதம் கொட்ட வேண்டும்? அவை எப்போது கொட்டவேண்டும்?

4. கலவை மண்ணை செடிக்குப்போட்டால் செடிகள் நன்றாகவளரும் என்று சஞ்சிகையில் எழுதியிருக்கிறீர்கள். கலவைமண் என்றால் என்ன? எப்போது போடுகிறது? எங்கே அகப்படும்?

5. சிந்தி சேர்ந்த பசு உங்களிடம் விலைக்கு அகப்படுமா? விலை எவ்வளவு ஆகும்?

6. ஏரி எதிர்வாயில் சுமார் 4 ஏக்கா இருக்கிறது. கார்த்திகை மாதங்களில் ஏரியில் தண்ணீர் பிடித்தால் நிலம் முழுகுண்டாய் விடுகிறது. தை மாதம் வரையில் ஏரியில் முழுகிக்கிடக்கிறது, சான்பட்ட பூம்பாளைப் பயிர் செய்தால் மாசிமாதம் அறுவடை செய்ய வருகிறபடியால் இரண்டுதண்ணீர் பாடாகிவிடுகிறது. ஆகையால் முழுகிடையாலும் லக்ஷியம் பண்ணாமல் ஆடி ஆவணிமாதத்தில் விதைத்து புரட்டாசிஐப்பசி மாதங்களில் அறுவடைக்கு வரக்கூடியதாவது அல்லது மூன்று மாதத்து பயிராகவாவது இருக்கும் நெல்விதை ஏதாவது உங்களிடமாவது அல்லது இன்னும் யாரிடமாவது அகப்படுமா? அப்படியிருந்தால் தெரிவிக்கவேணும்.

தங்களுக்கு அதிகமான சிரமம் கொடுத்திருப்பதைப்பற்றி மன்னித்து என்மனோபீஷ்டத்தைப்பூர்த்திசெய்ய வேணுமாய்க்கேட்டுக்கொள்கிறேன்.

ம. ஸ்ரீனிவாச வரதாச்சாரி

காங்னூர் கிராமம் திருவள்ளூர் மார்க்கம்

பதில்

(1) நாம் நேரில் பார்க்காமல் அபிப்பிராயம் கூறுவது நோயாளியைப் பார்க்காமலே மருந்து அனுப்பிவைத்தியம் செய்வதற்குச் சமானமேயாகும். தாங்கள் இவ்வளவு சமீபத்திலிருந்தும் ஸ்ரீமான் ராவ்பகதூர் ஜெ. செய்வக்கோராஜுலுகாரு தற்காலம் திருநெல்வேலி ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம்

செய்து கொண்டிருப்பதாலும் நாம் இம்மாதக் கிருஷிகனை அனுப்பிவிட்டு எமது சமூக பிரசாரத்திற்காக மே மீ 13ம் உ முதல் ஜூன்மீ 4உ வரை பல ஊர்களுக்குச் செல்ல உத்தேசித்திருப்பதாலும் நேரில் வந்து பார்த்து அபிப்பிராயம் கொடுக்க அசக்தர்களா யிருக்கிறோமென்று சொல்ல வருந்துகிறோம்.

மேற்சொன்ன காலத்தில் கிருஷி நேயர்கள் எழுதும் கடிதங்களுக்கு கூடிய ஜல்தியில் பதில் எதிர் பார்ப்பதும் சாத்யமல்லவென்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள் கடிதத்திலிருந்து தாங்கள் தற்காலம் மாஞ்செடிகள் நட்ட இடம் களர்சம்மந்தப்பட்டதாயிருக்கலாமென்றும் தாங்கள் மணல் 2 கூடை, அதற்குமேல் வண்டல் மண் 2கூடை, அதற்கு மேல் சாணி 2 கூடை, தனித்தனியாய்ப் போட்டு இவ்வாறே குழிகளை ரொப்பியதாகவும் குழிகள் மேல்வரை ரொப்பாமல் 1 அடி ஆழம் இருக்கும்படி மண்ணூர்த்து அந்த 1 அடி ஆழத்தில் செடிகள் நட்டதாகவும் தெரிகிறது. இவ்வாறு செய்திருந்தால் நட்ட செடிகளில் சுமார் 10 செடிகள் பட்டுப்போனதும் மீதிச் செடிகள் துளிர்க்காமலிருப்பதும் ஆச்சரியமேயல்ல. ஏனென்றால் வண்டல் மண் தனியாய் போட்டிருப்பதால் அந்த மட்டத்தில் தண்ணீர் போன உடன் வண்டல் மண்ணிலேயே தண்ணீர் ஊறி நின்று கீழேபோகாமலே இருப்பதால், செடிகளின் வேர்கள் அந்த வண்டல் மண்மட்டத்தில் இருந்தால் அதிகத்தண்ணீர் கோர்த்திருப்பதால் வேர்கள் அழுகியும், அந்த மட்டத்திற்கு அடியில் வேர்கள் போயிருந்தால், தண்ணீரெல்லாம் கீழே இறங்காமல் அந்த வண்டல் மண்ணாலேயே கிரஹிக்கப்பட்டு வைத்திருப்பதால் வேர்களுக்கு இறங்காமலும் இந்த இரண்டுவித காரணங்களில் ஏதாவதொன்றால் செடிகள் பட்டிருக்கலாம்.

மாமரங்கள் வைத்த நிலம் இயற்கையில் களர் நிலமாயிருக்கிருந்தால் குழிகளிலிருந்து வெட்டி யெடுத்த மண்ணை அப்புறப்படுத்திவிட்டு செம்மண்ணாவது, சாள்மண்ணாவது மூன்றுபாகமும், வண்டல் ஒரு பாகமும் மணல் ஒருபாகமும், தொழுஎரு ஒருபாகமும், ஆகிய மேற்சொன்ன செம்மண், தொழு எரு, வண்டல் மண், மணல் ஆகிய நான்கையும் ஒன்றாய் மேலேகொட்டி அந்நான்கும் நன்றாய்க் கலக்கும்படி பலதடவைகள் மண் வெட்டியினால் கோரிப் போட்டுக்கலந்து இவ்வாறு கலந்த மண்ணை குழிகளுக்கு உள்ளே ஒரு அடி ஆழம் இருப்பதற்குப் பதிலாக, பூமி மட்டத்திற்குமேலே ஒரு அடி உயரம் இருக்கும்படி கலவை மண்போட்டு மாஞ்செடிகளிருக்கும் தொட்டிகளை உடைத்து அந்த தொட்டியளவு ஆழம் தோண்டி நட்டு தண்ணீர் ஊற்றிவந்தால் சாதாரணமாய் செடிகள் சாகாமல் நன்றாய் துளிர் விட்டுவரும். தொட்டிகளில் போட்டுச் கொடுக்கும்மண் சாம்

காப்பதற்காகவும் அதிக வேர் விடாமலிருப்பதற்காகவும் களிமண் மாத்திரம் செடிவியாபாரிகள் போட்டுவைப்பது வழக்கமாதலால் தொட்டியை உடைத்தவுடனே மாஞ்செடிகளின் வேர்கள் வெளியே தெரியாவிட்டால் சிறுகளைகொட்டு கொண்டாவது அல்லது களைபோடும் கூர்மையான குச்சி கொண்டாவதுவேர்களுக்கு சேதமுண்டாகாதபடி சுற்றிலுள்ள மண்ணை ஜல்லிவேர்கள் தெரியும்வரை எடுத்துவிட்டுஅப்பால் நடவேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் அதுவரை தொட்டிகளில் ஊற்றும் தண்ணீர் தொட்டிகளின் மேல்விளிம்பு வரையில் தங்கி நிற்பதால் களிமண்ணில் மெதுவாக இறங்கி அடிவரையில் ஈரம் போய் தண்ணீர் சுவர்வதற்கு 2மணி நேரமாவது பிடிக்கும். நாம் குழிகளில் நட்டதும் ஊற்றும் தண்ணீர் சுற்றிலுமிருக்கும் புதிதாகப் போட்ட மண்ணில் சட்டென்று இறங்கி கீழேவடிந்து விடுமாகையால் வேர்களுக்குத் தண்ணீர் இறங்கக்கூடிய சாவகாசமில்லாததால் தண்ணீரில்லாமல் காய்ந்து போகவும் ஹேதுவுண்டு: இதுவரையில் நல்ல தண்ணீர் செடிகளுக்கு ஊற்றப்பட்டிருந்து தங்கள் கிணற்றுத்தண்ணீர் உவர் தண்ணீராயிருந்தாலும் ஓர் வித செந்நிறமான தண்ணீராயிருந்தாலும் அந்தத்தண்ணீர் ஊற்றியதின் காரணமாகவும் இறக்கக்கூடும். மக்காத தொழு எரு,செத்தை முதலியவைகள்போட்டிருந்தால் கரையான் (செள்ளு) வேர்களைத்தின்று செடிகள் செத்துமிருக்கும். ஆகையால் நாம் மேலேசொன்ன காரணங்களில் ஏதாவதொன்றால் தான் செடிகள் செத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். இதில் எந்தக்காரணத்தால் செடிகள் செத்தனவென்று தாங்களே செத்த செடிகளைச்சுற்றி ஜாக்ரதையாகத் தோண்டிப்பார்த்து மேற்சொன்ன காரணங்களில் எதனால் செடிகள் செத்திருக்கலாமென்று எழுதினால் அதற்கேற்றபடி சிகிச்சை சொல்லக்கூடும்.

எரு, வண்டல், மண், மணல், முதலியன தனித்தனி அடுக்காய் போட்டிருந்தால்,சாகாமலிருக்கும் செடிகளின் வேர்களைச் சுற்றிலுமுள்ள செம்மண் எரு,வண்டல், மணல்,முதலியவைகளை மேலே எடுத்து ஒன்றாய்க் கொட்டிக் கலந்து போட்டால் மற்றச்செடிகள் இக்காரணத்தால் இதுவரை விடாதிருந்தால் இவ்வாறு செய்தவுடன்நன்றாய் துளிர்விட்டுவரும்.

(2) ஒட்டுக்குக் கீழ் இருப்பது கொட்டைச் செடி யாதலாலும் ஒட்டுக்கு மேலிருப்பது நாம்விரும்பிய ஜாதிச் செடியாகையாலும், ஒட்டுக்குக் கீழ்வரும் துளிர்களை வளரவிட்டால் சாதாரண கொட்டைச் காய்களே காய்க்கும். அது பெரிய கொட்டையோடு கோலியளவான காய்களாயுமிருக்கலாம். அல்லது பெரிய காய்களாயாவது இருக்கலாம். புளிப்பு நாருள்ள காய்களாயாவது இருக்கும் அபூர்வமாய் நல்ல காய்களாவுமிருக்கும். நல்ல காய்களாயிருப்பினும் பெரிய கொட்டையும் கொஞ்சம் சதைப்பற்றுள்ளதாகவே யிருக்கும். ஆகையால்தான் அந்த பாகத்தில்வரும் துளிர்களைக் கிள்ளி எறிந்துவிடவேண்டும்.

அத்துடன் கொட்டைச் செடியின் கிளைகள் கீழ்பாகத்திலிருப்பதாலும் கொட்டைச் செடி கிளைகள் ஒட்டுச் செடி கிளைகளைவிட வீரியமாய் வளரு மாதலாலும் செடியின் சத்தெல்லாம் கீழ்பாகத்திலிருக்கும் கொட்டைச் செடிகளின் கிளைகளே கிரஹித்துக்கொண்டு ஒட்டுக்கிளைகள் சரிவர வளராமல் கட்டைபாய்த்தாவது போகும், அல்லது நாளாவிர்த்தியில் கொட்டைச் செடிகளின் கிளைகளால் மூடப்பட்டு போதிய காற்று வெயில்படாமல் நசுக்குண்டு பட்டுப் போகவும் ஹேதுவுண்டு, ஆகையால்தான் அதை அப்புறப்படுத்த வசியம்,

(3' செடிகள் ஆடிமீ மழை பெய்தவுடன் நட்டால் பாத்திகள் சோராக இராமலும் கடுங்காய்ச்சலாகாமலும் முதலில் நடும் அன்று நாலுகுடம் தண்ணீர்விட்டால் அப்பால் மூன்று நாளைக்கொருதரம் 2குடம் தண்ணீர் விட்டு வந்தால் போதுமானது. பூமிமட்டத்திற்கு ஒரு அடி உயரம் மேலே செடிகள் நட்டிருப்பதால் அதிக ஈரம் தங்கி வேர் அழுகாது. ஆனால் தண்ணீர் ஊற்றஊற்ற மண் அழுந்தி மழைகாலம் தண்ணீர் கட்டிநிற்காமல் போவதோடு செடி நாளாவட்டத்தில் பூமிமட்டத்திற்கு இறங்கிவிடும்.

(4) எருவேறாகவும் களிமண் வேறாகவும் மணல் வேறாகவும் குழியிலிருந்து எடுத்த மண் வேறாகவும் தனித்தனி அடுக்கடுக்காய் போடாமல் மேற்சொன்ன எல்லாவற்றையும் மேலேயே ஒன்றாய்க் கொட்டி நன்றாய்க் கலந்து போடும் மண்ணிற்குத்தான் கலவைமண் என்று சொல்வது,

(5) சிந்துதேசத்துப் பசு எங்களிடம் விலைக்கு அகப்படாது. கோயம்புத்தூரிலிருக்கும் கால்நடை நிபுணருக்கு எழுதினால் அவர் ஒருக்கால் விற்கக்கூடும். பக்கிங்காம் கர்நாடிக் மில்ஸ்காரரும் சில சமயம் விற்கிறார்கள். அவர்களுக்கு எழுதினாலும் தெரிவிப்பார்கள், பசு ஒன்றுக்கு 150 முதல் 250 வரையில் இருக்கலாம்.

(6) திருநெல்வேலி ஜில்லாவில் அறுபதாம் குறுவையென்ற ஒருதினுசு நெல் இருக்கிறது. அதற்கு 60ம் குறுவை (அதாவது 60 நாட்களில் விளையும் குறுவை) என பேரிருந்தபோதிலும் அது அறுவடையாக சுமார் மூன்று மாதங்களாகிறது.

மதுரையிலிருக்கும் விவசாய டெப்டி டைரெக்டர் அவர்களுக்கு எழுதினால் வாங்கி அனுப்புவார்கள். அல்லது செங்கல்பட்டு ஜில்லா பாலங் மலையிலிருக்கும் விவசாய டெப்டி டைரெக்டர் அவர்களுக்கு மனுச் செய்துகொண்டால் அவர்களாவது அல்லது அஸிஸ்டெண்ட் டைரெக்டர் அவர்களையாவது அல்லது அக்ரிகல்சரல் டிமான்ஸ்டிரேட்டரையாவது இனமாய் தங்கள் நிலத்தைப்பார்வையிட்டு இன்ன தினுசு நெல் போடலாமெனச் சொல்வதோடு அதன் விரையம் கொடுத்தால் அவர்களே அத்தினுசு நெல் வரவழைத்தும் கொடுப்பார்கள்.

ப. ர.

கனம்கிருஷிமன் பத்திராதிபர் அவர்களுக்கு

2535 நெ சந்தாதாரர் கே கோபால்சாமி எழுதியது, பாங்கு நெல்லில் எத்தனைவகை யிருக்கிறது. தங்கள் பத்திரிகையினால் வைகாசி ஆனி மாதங்களில் தோட்டக்கால்களில் பயிரிடக் கூடியது என்றும் புரட்டாசியில் பயிரிடக் கூடியது என்றும் இரண்டுவகை இருப்பதாகத்தெரிகிறது. அவை வெவ்வேறானால் அவைகளின் செய் நேர்த்தி விபரம் தனித்தனியாய் தெரியப்படுத்துவீர்கள் என்று நம்புகிறேன். பாங்குநெல் இருவகையானால் வைகாசி ஆனி மாதங்களில் பயிரிடக்கூடிய நெல் 3 படியும் புரட்டாசியில் பயிரிடக்கூடிய நெல் 3படியும் தனித்தனியாய் அடியில்கண்ட விலாசத்துக்கு அனுப்பிக் கொடுக்கவேணும். இரண்டும் ஒரே நெல் ஆனால் வைகாசியில் பயிரிடக்கூடிய 3படிநெல் ரெயில்வேயில் அனுப்பி பாசை வி. பி.ல் அனுப்பினால் பணம் செலுத்தி பாஸ்பெற்றுக்கொள்ளுகிறேன். தயவுசெய்து விவரமான பதிலும் விதையும் அனுப்பிக் கொடுக்கவேணும், நெல்வகைக்குபட்டணம் படி 3 தேவை

பதில்

நமக்குத் தெரிந்தவரை பாங்குநெல் ஒருவகைதான் இருக்கிறது. பாங்கு நெல்லை வைகாசி, ஆனி மாதங்கள் முதல்கொண்டு புரட்டாசி மாசம் வரை அந்தந்தப் பிரதேசங்களின் சீதோஷ்ண பேதம், மழை மாறுதல்களுக்குத் தக்கபடி பயிரிடுகிறது வழக்கம். மொத்தத்தில் இப்பயிர் கோடைகாலங்களில் பயிர் செய்து கிடைக்கும் மாசூலைப்போல் மற்றக் காலங்களில் கிடைப்பதில்லை.

நம்மிடம் சற்றுப் பழய விதை தானிருக்கிறது. இவ்விதை புதிதாய் வேண்டுமானால் கோயம்புத்தூர் சரகம் விவசாய டிப்டி டைரக்டரவர்களுக்கு எழுதினால் அவர்கள் சேலம்ஜில்லாவில் ஹோசூர் முதலிய இடங்களிலிருந்து தருவித்துக் கொடுக்கக் கூடும்; தங்களுக்கு சிநேகிதர்கள் அவ்விடமிருந்தால் தருவித்துக் கொள்ளலாம் ப- ர்-

ஐயா,

தங்களுக்கு ஒருவாரத்திற்கு முன்பு எழுதியிருந்த கடிதம் கிடைத்திருக்கலாம். அதில் எனக்குபாங்குநெல் அனுப்பிக்கொடுக்கும்படி கேட்டிருந்தேன் சித்திரை மாதப்பத்திரிகையில் தாங்கள் பாங்குநெல் கிடைக்குமிடம் பின்னால் தெரிய வந்தது. தங்களிடம் மேற்படி நெல் இருந்தால் கூடிய சீக்கிரத்தில் முன் கடிதத்தில் கண்டபடி அனுப்பிக் கொடுக்கக் கோருகிறேன்.

சென்ற வருஷக்கடைசியில் சர்க்கார் விவசாய மோட்டார் காகஜி இவ்வூருக்கு வந்திருந்த பொழுது அதில் கேழ்வரகு தினுசுகள் பார்த்த ஞாபகம் இருக்கிறது. அவைகளில் நெ 8 பல்லாரிராகியை விடச் சிறந்தது என்று எழுதியிருந்தது. அதைப்பற்றி அச்சமயம்வந்திருந்த விவசாய உத்தியோகஸ்தரை விசாரித்ததில் அதற்குப் அப்பொழுது காலம் தவரிவிட்டது

என்றும் அதை செப்டம்பர்மாதத்தில் பயிர்செய்ய வேண்டுமென்றும் சொன்னார். ஆற்றிறவையில் சாகுபடி செய்யக் கூடிய எங்களுடையதோட்டத்தில் இந்த வைகாசி மாதத்தில் பாங்குநெல் சாகுபடிசெய்து அருவடையானதின் மேல் ஷை செ8 ராகியை சாகுபடி செய்யலாமா? இதற்குத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன். ஷை ராகிக்கு செய்நேர்த்தி உழவு முதலியவைகள் எல்லாம் இப்பக்கங்களில் ராகிக்குச்செய்வதுபோலா அல்லதுவேறு? ஷை செ8ராகி தங்களிடம் கிடைக்குமா? விலைவிபரத்திற்கு பதில் தெரியப் படுத்தக் கோருகிறேன்.

பாங்குநெல் தங்களிடம் இருந்தால் சீக்கிரம் அனுப்பிக்கொடுக்கவும்.

என்னுடைய முன் கடிதத்திலேயே பதிலுக்காகதபால்பில்லைஅனுப்பியிருக்கிறேன்.

பதில்

நிரூபநேயர் குறிக்கிறபடி செப்டெம்பர் மாசம் நம் 8 பெல்லாரி ராகியைப் பயிர்செய்யலாம். இது புஞ்செய் காட்டில் பயிர்செய்யும் ராகியேயல்லாமல் நஞ்சை நிலங்களில் இறவைசெய்து பயிர்செய்யப் படுவதில்லை. நிரூபநேயர் குறிக்குமிடம் வடிகால் வசதியுள்ளதும் தண்ணீர்த் தேங்காமலிருக்கக்கூடிய நிலமானால் சாதாரணராகிபயிர் செய்வதுபோல் பயிர்செய்யலாமென்பது நமது அபிப்பிராயம். சாதாரணராகியாகிய கருஞ்சுருட்டையினைவிட இந்தராகி ஒருவாரம் களித்து அறுவடையாகுமென்பது நமது அபிப்பிராயம், நம்மிடம்ராகி கிடையாது. விவசாய டிபார்டு மெண்டாருக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம் ப-ர்-

ஸ்ரீமான் கனம் தங்கிய ஐயா:—

கிருஷிகன் பத்திராசிரியரவர்கள் சமுகத்திற்கு

2158. மீர் சந்தாதார் எஸ். நாரயணசாமி ரெட்டி வணக்கமாய் எழுதிக்கொண்ட நிரூபம்.—

1 கிருஷிகன் புஸ்தகம் 12ம்-பிரதி1 பக்கம் 8.ல் சிந்து தேசம் பசுக்களைப் பற்றி எழுதியிருந்த விபரங்களைப் படித்துப் பார்த்ததில் சில பசுக்கள் வாங்க எண்ணம் உண்டாயிற்று. அதை தங்கள் மூலம் வாங்க உத்தேசம். ஆனதால் ஒரு நல்ல தலையீற்றுப்பசு என்ன விலையாயிருக்கும். ஒரு பொலிகாளை என்ன விலையாயிருக்கும். 10,12; நல்ல பசுக்கள் தேவையாயிருந்தால் தங்களால் வாங்கிக் கொடுக்கக் கூடுமா? என்கிற விபரங்களும்.—

2 என்னுடைய தோப்பில் உள்ள சில புளிய மரங்களில் சாம்பல் ஆணி, சொத்தை, இவ்விதமான பிரயோஜன மில்லாத காய்களாகக் காய்க்கிறது. ஆனதால இப்படிக் காய்க்கும் மரங்களுக்குச் செய்யவேண்டிய பக்குவங்களை விபரமாகக் கிருபைகூர்ந்து தெரிவிக்கும்படி கோருகிறேன்.

எஸ். நாரயணசாமி ரெட்டி

திண்டுக்கல் போஸ்ட்டு

பதில்

(1) சிந்து தேசத்துத் தலைசிறந்த பசு சுமார் ரூ 250 விலையிருக்கும் அந்த ஜாதி பொலிகாளையும் ஏறக்குறைய அதே விலைதான் இருக்கும். நம்மிடம் மேல்படி ஜாதிபசுக்கள் தற்காலம் விற்பதற்கில்லை: பங்களூர் கர்நாட்டிக் மில்ஸ்கம்பெனியாருடைய தேவைக்கு அதிகமாய் விருத்தியாகும் போது சமயாசமயங்களில் அவர்கள் விற்பதிலிருந்து ஒன்றிரண்டு பசுக்கள் வாங்கித் தரலாம், கோயம்புத்தூரிலிருக்கும் சென்னை விவசாய இலாகா கால்நடை சூப்பிரண்டன்ட் துரையவர்களுக்கு எழுதினாலும் ஒன்றிரண்டு பசுக்கள் கொடுப்பார்கள். ஆனால் அந்த ஜாதிப்பசுக்கள் திடமான பசுக்கள் 10—12 இங்கு வாங்குவது தற்காலம் கஷ்டமாயிருக்குமென்றெண்ணுகிறோம்.

நமக்கு போகவர 2வது வகுப்பு தாரணையும் நம்முடன் வரும்வேலைக்காரனுக்கு மூன்றாவதுவகுப்பு தாரணையும் கொடுத்து அனுப்புவதாகில் நாம் இணமாய்ப் போய் நல்ல பசுக்களைத் தெரிந்தெடுத்து வாங்கிவரக்கூடும்.

இந்த மாதத்திலேயே பசுக்கள் தேவையென்று இரண்டு சந்தாதாரர்கள் தெரிவித்ததுபோல் இன்னும் தேவையான சந்தாதாரர்கள் தெரிவித்து குறைந்தது 30 பசுக்களாவது வாங்கும் பக்ஷத்தில் ஒவ்வொரு பசுவின்பேரில் சொற்ப செலவு தொகைதான் ஆகும். அப்படி வேண்டியவர்களெல்லாம் தெரிவித்தால் நாம் கூடிய ஜல்தியில் சௌகரியப்படுத்திக்கொண்டு போய் வாங்கி வரக்கூடும், எப்படியாவது இந்த உயர்ந்ததும் நமது நாட்டுக்கேற்றதுமான இந்த ஜாதிப்பசுக்கள் நமது நாட்டில் விருத்தியாக வேண்டுமென்பதே நமது முக்கிய கோரிக்கை.

2. புளியமரத்தின் காய்கள் சாம்பல் ஆணி, சொத்தை முதலியன விழுவதற்குப் பலகாரணங்களிருக்கலாம், ஷை விழுந்தபாதிரி காய்களில் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து2டப்பாக்களிலபோட்டு ஒருடப்பா கோயம்புத்தூரிலிருக்குக் பூச்சி சாஸ்திரிக்கும் இருடப்பா பூஞ்சாண சாஸ்திரிக்கும் (Mycologist & Entamologist) தனித்தனி அனுப்பினால்சௌகரியப்படும்போது அவர்கள் இருவரில் எவர் சம்மந்தப்பட்ட வியாதியால் இக்கெடுதிகள் நேர்ந்திருக்கிறதோ அவர்கள் இணமாய் வந்து சுற்றிப்பார்த்து வேண்டிய சிகிச்சை சொல்லுவார்கள். நம்மால் நேரிலே பார்க்காமல் சொல்ல சாத்யப்படாது.

இப்பேர்ப்பட்ட உபகாரம் கிருஷிகருக்குச் செய்வதற்காகவே கருணை பொருந்திய நமது கவர்ண்மெண்ட்டார் அவ்விரு உத்யோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு எழுதாததும், அவர்கள் உதவி பெறாததும் நமது குற்றமேயாகும். ப. ர.

ஸ்ரீமான் கனம் கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு வெங்கடத்தானூர் தங்கள் பத்திரிகைக்கு சந்தாதாராகிய மு. கந்தசாமிபிள்ளை எழுதும் கேள்விகளுக்கு தங்கள் கிருஷிகன் மூலமாய் பதில் வெளியிடுமாறு கோருகிறேன்.

கேள்விகள் (1) மானவாரி புகையிலை எந்தமாதம் பயிரிடலாம்.

(2) எவ்விதம் நாற்றுவிடுகிறது?

(3) நாற்றுவிட்டு எவ்வளவு நாட்கழித்து நடுகிறது?

(4) எவ்வளவு தூரத்திற்கு ஒரு கண் நடுகிறது?

(5) நல்லஜாதி மானவாரி புகையிலை விதை தங்கள் மூலமாய் கிடைக்குமா?

(6) மானவாரி புகையிலை சுருட்டுக்கு உபயோகப்படுமா?

(7) மானவாரி புகையிலை பயிர்செய்யும் விதமும் பாடம்செய்யும் விதமும் தங்கள் கிருஷிகன் மூலமாய் தெரிவித்தால் மிகவும் நன்மையாயிருக்கும், சிரமங்களுக்கு மன்னிக்கவும்:

(8) மானாவாரி புகையிலை எந்த இடங்களில் அதிகம்?

பதில்

(1) மானாவாரிப் புகையிலை குண்டூர் நெல்லூர் முதலிய ஜில்லாக்களில் ஏராளமாய் யாதொரு இறைவையில்லாமல் மழையின் உதவியாலேயேபயிரிடுகிறார்கள், கோயமுத்தூர் ஜில்லாவின் சில பாகங்களிலும் வடஆற்காடு ஜில்லாவின் சிலபாகங்களிலும் சொற்ப விஸ்தீரணங்களிலும் பயிரிடப்படுகிறது. தஞ்சை திருச்சி முதலிய ஜில்லாக்களில் படுகை நிலங்களில் நெல் அறுவடைக்குப் பின்னும் பயிரிடுகிறதுண்டு.

(2) சாதாரணமாக மிளகாய் கத்திரி முதலியவைகளுக்கு நிலம் தயார் செய்வதுபோல் நாற்றுப்பாவும் இடம் தயார்செய்து மண்ணைக்கட்டி யில்லாமல் தூங்குவம்போல்தூளாக்கி பாத்திகள்கட்டி பாத்திகளில் இருக்கும் மண்ணை சற்றுப் பலகையால் அமுக்கிக் கெட்டிப்படுத்தி சிறுவிதைகள் ஆழத்தில் இறங்கிவிடாமல் மேலிட்டாப்போல் தெளித்து மூடி தண்ணீர் பாய்ச்சிக் கொண்டு வரவேண்டியது.

(3) நாற்றுவிட்ட பின் நாற்றங்காலில் நாற்றை 30 முதல் 35 நாள் வரைக்கும் விட்டுவைக்கும்வழக்கமுண்டு.

(4) எவ்வளவு தூரத்திற்கு கண்கள் நடுவதென்பதுநடும் மானாவாரிப் புகையிலை தினுசைப்பொருக்கும். சாதாரணமாய் ஒன்றேகாக் அடி முதல் 2அடிவரைக்கும் இடம் விடும் வழக்கமுண்டு.

விதை நம்மிடம் கிடையாது.வேண்டுமானால் விவசாய டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர் மூலமாய் மனுச்செய்து பெற்றுக் கொள்ளலாம்:

(6) மானாவாரிப் புகையிலையை சுருட்டுகள்செய்ய அநேகஇடங்களில்உபயோகப் படுத்துவதுண்டு.ஆனால் ஏராளமாய் வியாபாரம் செய்வதை நாம் பார்த்ததில்லை

(7) மானாவாரிப் புகையிலையை சாகுபடி செய்யும் விதத்தைக்குறித்து தனிவியாசம் பத்திரிகையில் சாவகாசமாய் எழுதப்படும்: ஏனென்றால் அது ஒருசிறு புஸ்தகமாகும்: ப: ர:

ஐயா,

சமூகத்திற்கு 2022ம் சந்தாதார் மிகவும் வினயத்துடன் எழுதிக் கொள்ளும் விஞ்ஞாபனம். இப்போது குட்டக்கார் நெல்கதிர் பயிராயிருக்கிறது- அதை சாரைப்பாம்போ கீரிப்பிள்ளையோ கத்தரித்துப் போட்டு விடுகிறது. அதற்கு ஷைபயிரை ஜாடைஜாடையாக ஒதுக்கிவிட்டு மத்தியில் இடைஇடையே பனை ஓலை கொத்துகள் கட்டிருக்கிறேன், மறுபடியும் அநேகமாதிரி கத்தரித்து போட்டுவிடுகிறது. இன்னதுதான் கத்தரித்துப் போடுகின்றதென்று நேரில் நான் பார்க்கவில்லை ஷைபயிர் நாசமடையாமலிருப்பதற்கு ஏதாவது காரணம் தங்களுக்குத் தெரிந்திருந்தால் பதில் தெரிவிக்கும்படி கோருகிறேன். பத்திரிகையில் தெரிந்தால் நாள் செல்லும் என நினைத்து ரிப்ளைகார்டு எழுதினேன் தயவுசெய்து உடனே பதில் தெரிவிக்கும்படி கோருகிறேன்- சதாசிவரெட்டியார்

பதில்

தாங்கள் குறிக்கும் சேதம்பாம்பினுல்தான் உண்டாகிறதென்பது எமது அபிப்பிராயம். இதுஅநேகமாய் இராக்காலங்களில் நடப்பதாகக் கொள்கை பனை ஓலையை நெருக்கிநட்டு அவ்வோலை காற்றினுல் அசைந்து சலசலப்பு சத்தம் கொடுக்கும்போது நாசம்செய்யும் ஜந்துக்கள் ஓடிப்போய் விடுமென்னும் கருத்துடன் தான் இவ்வாறு செய்வது, சில இடங்களில் ஆள்வைத்து தகரத்தின்மேல் சத்தம் உண்டாக்கிக் கொண்டிருப்பதனுல் இப்பாதை நிவர்த்தியாக்கப் படுகிறது. சிலர் ஆங்காங்கு மண்ணெண்ணை வெளிச்சங்கள் கட்டும் சித்தியடைந்திருக்கிறார்கள் மண்ணெண்ணையைப் போலொத்த ஜாஸ்தி நாற்றமுள்ள சரக்குகளை வயலில் தெளித்தாவது அல்லது தண்ணீருடன் பாயவிட்டாவது வந்தாலும் இஜ்ஜந்துக்கள் அநேகமாய் இவ்வீச்சத்திற்கு வருவதில்லை. ப. ர்.

ஸ்ரீமான் ராவ் பகதூர் ஜெ. செல்வரங்க ராஜு காரு

தங்கள் திருத்தம்பியாருக்கு கடிதம் எழுதினேன், ஷையார்தாங்கள் கோவம்புதூரில் தற்காலம் இருப்பதாகவும் அபார இலாபம் தரும் புளியம் விதைகள் திருநெல்வேலி ஜில்லா ஆலங்குளம் கிராமத்தில்கிடைக்குமென்றும் அந்த கிராமம் தாங்கள் இப்போதிருக்கும்கிராமத்திற்குச் சமீபத்திலிருப்பதாகவும் தங்களுக்கு எழுதினுல் தாங்கள் வாங்கி அனுப்புவீர்களென்றும் தெரிவித்தார்கள்.

10 தோலா புளியமரத்விதையை புக்போஸ்ட்டில் அனுபபக்கோருகிறேன்' அல்லது அன்ரிஜிஸ்டர்ட் பார்ஸல் போஸ்ட் 20 தோலா இடைவரையில் அனுப்பலாம் எந்தவிதமாகவாவது அனுப்பினுல் நான் கிரயத்தை கொடுக்க தயாராயிருக்கிறேன்,

முத்துகிருஷ்ண நாயுடு

### பதில்

நிருபநேயர் கேட்கும் புளியமரத்தின் விதைகளை கோயமுத்தூரின் அருகாமையிலிருந்தாவது திருநெல்வேலிஜில்லா ஆலங்குளத்திற் கருகாமையிலிருந்தாவது வருவித்துக் கொடுக்கவேண்டும். அவ்விடமிருக்கும் நமது நண்பர்களுக்கு எழுதியதில் தற்காலம் விதை கையிருப்பில் இல்லையென்றும் இப்போதுதான் புளி ஓய்வு காலமென்றும் தை, மாசி மாதங்களில்தான் பழம் கிடைக்கக் கூடுமாதலால் அத்தருணத்தில் இதைக்குறித்து ஞாபக மூட்டினால் அனுப்பக் கூடுமென்றும் எழுதியிருக்கிறார்கள். ஆகையால் நமக்கு அப்போது ஞாபக மூட்டித் தருவித்துக் கொள்ளலாம். ப. ர.

ஸ்ரீமான் கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

கிருஷிகன் 11வது புஸ்தகம் 9-10வது சஞ்சிகைகளில் மாதுளையைப் பற்றி தாங்கள் யெழுதியுள்ள வியாசத்தில் அதற்கு யேற்படக்கூடிய சாதாரண நோய்களும் அதற்கு பரிகாரங்களும் இல்லாததுபற்றி தங்களுக்கு அது விஷயமாய் எழுதித் தெரிந்து கொண்டால் எனக்கும் மாதுளைப் பயிர் செய்திருக்கக் கூடிய கிருஷிகருக்கும் ஒத்தாசையாயிருக்கு மென்று நினைக்கிறேன்.

1 மாதுளங்காயின் உள்ளேயே பாதி முத்துகள் முதிராமல் கரிசலடைந்து அழுகிப் போவதின் காரணமென்ன? அதில் கிருமிகளும் உண்டாகக் கூடுமென்று நினைக்கிறேன். அதைத்தடுக்கயேதாவது மார்க்கமுண்டா?

2 மாதுளை மகசூலுக்குப் பின் காய்த்த கிளைகள் சுள்ளி தட்டிகாய்ந்து விடுகிறது. அப்படி காய்ந்த கிளைகளை வெட்டி விடலாமா? அப்படி வெட்டிவிட்டால் மரத்திற்கு யேதாவது கெடுதல் உண்டா?

3 மாதுளை மரங்களில் கம்பளிப் பூச்சிமாதிரியுள்ள ஒருவிதப் பூச்சி மரம் துளிர்விடுகிற காலங்களில் உண்டாகி இலைகளை நாசஞ் செய்துவிடுகிறது, சிலசமயம் பூக்களையும் அரித்து விடுகிறது அதற்கு ஏதாவது மருந்து தெளிக்கலாமா? எங்கே கிடைக்கக்கூடும்?

4 திராக்ஷைக் கொடிகளை துண்டு துண்டாக வெட்டி ஒரு இடத்தில் பதியன்போட்டு துளிர்விட்டுக்கொடி எடுத்தபிறகு வேறு இடங்களில் கொண்டு போய் வைக்கலாமா? அல்லது எந்த இடத்தில் வைப்பதாய் உத்தேசமோ அதே இடத்தில்தான் பதியன்போடவேண்டுமா ஷை துண்டுகளை வளைத்து நட்டு துளிர்கண்ட பிறகு வெட்டிவிட வேண்டுமா ஸாதாரணமாகவே சாய்த்து நட்டுவிடலாமா?

5, பங்குனி மாதத்திய சஞ்சிகையில் 2117 நீ சந்தாதாரருக்கு யெழுதிய பதிலில் அதை கவாத்துசெய்யும்விதம் முதலியவற்றைப்பற்றி பாளையங் கோட்டைக்கு வருங்காலத்தில் ஞாபகப்படுத்தினால் நேரில் காண்பிக்கப்படும்யெ

ன்றுயெழுதியுள்ளது, தங்கள் கிருஷிகன்பத்திரிகையைப்பார்க்கும்ஒவ்வொரு வருக்கும் தெரியும்படி பத்திரிக்கை வாயிலாகவே யெழுதினால் நலமாயிருக்கும்.

6 திராக்ஷ, ரோஜா முதலிய பதியங்களை கரையான் அரிக்காமல் என்ன செய்யலா மென்பதையும் சுத்தமான மீன்குவானோ எங்கே கிடைக்கும் என்பதையும் சித்திரை மாஸத்து கிருஷிகன் சஞ்சிகையிலேயே பதில் யெழுத வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். ஜி. சுப்பரமணியம்

பதில்

மாதுளை சோய்கொடிகள் விஷயமாய் விவசாய இலாகா பூச்சி சாஸ்திரி அவர்களுக்கும் பூஞ்சாண சாஸ்திரி அவர்களுக்கும் எழுதிக்கொண்டால் அவர்கள் உடனுக்குடன் பதில் தெரிவிப்பார்கள்,

(2) மாதுளையின் இலை புழு பூச்சிக்களைக்குறித்து தனிவியாசம் எழுத உத்தேசம்.

(3) கிருபகேயர் குறிக்கும் காய்ந்த கிளைகளை கவாத்து செய்வதுதான் நலம், அப்படி வெட்டுவதில் கெடுதல் சம்பவிக்காது,

(4) திராக்ஷக் கொடிகளைக்குறித்து தனி வியாசம் கிருபகேயர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் முன் பத்திரிகையில் எழுதியிருப்பதைப் பார்த்துக் கொள்வது நலம். ப- ர்,

ஸ்ரீமான் கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு

2070 சந்தாதார்- எ: பி:வெங்கிடசாமி நாயுடு எழுதிக்கொண்டது

புது வருஷத்திய சந்தா2—0—0இன்றுமணியார்டர்செய்திருக்கிறேன் என்றால் 5புது சந்தாதார்களைச் சேர்க்க முயற்சிசெய்திருக்கிறேன். ஒவ்வொருபழய சந்தாதார்களும் தங்களால் கூடுமானவரையில் புது சந்தாதார்களை சேர்த்துக் கொடுத்தால் கிருஷிகன் சந்தாதார்கள் அதிகமாகிபத்திரிகை வெளிவரும். அடியில் கண்ட விஷயங்களுக்கு தயவுசெய்து பதில் கிருஷிகன் மூலமாக தெரிவிக்கக் கோருகிறேன்.

1. கஞ்சிதாலுக்காவில் 153 நெ புத்தேரி கிராமத்தில் 12 ஏகர் புஞ்சை மணல் நிலத்தில் சென்ற வருஷ மணிலாகொட்டைப் பயிருக்கு எரி வண்டல் பூரா போட்டு மாசி கம்பெனியார் இரும்புக்கலப்பையால் 4 சால் ஓட்டி ஆடி பட்டத்தில் பயிர் போட்டு கார்த்திகையீ வெட்டியதில் ஏகர் 1க்கு பட்டணம்படி 500 ஆனது. ஷை என் நிலத்தில் ஒரு ஏகர் வாரக்காரருக்கு விடப்பட்டு என் நிலத்திற்கு போட்டதுபோல் எரிவண்டல் ஓட்டி மேற்படி பட்டத்தில் நாட்டுக் கலப்பையால் 4சால் ஓட்டி பயிர்போட்டு வெட்டியதில் கண்டு முதல் ஏகர் 1க்கு பட்டணம் படியால் 750படி ஆனது. மேற்கண்டபடி மாகுல் இரும்புக்கலப்பை உழவுக்குக்குறை வாகவும் நாட்டுக் கலப்பைஉழவுக்கு அதிகமான காரணம் தெரியவில்லை.

2· கோதுமை பயிர் செய்ய வேண்டுமென்று இருக்கிறேன். அதற்கு ஏற்ற மண் களிப்பா? மணல் இருமண் நிலமா? கிணற்றிறவைபில் அல்லது எரிபாச்சலில் செய்யலாமா? எந்த மாதத்தில் சாகுபடி பட்டம் விவசாயபஞ்சாங்கத்திலாவது டிபார்ட்மெண்டார் பிரசுரத்திலாவது கோதுமைப்பத்தி காணப்படாததினால் தெரிவிக்கக்கோருகிறேன்.

3. விவசாய டிபார்டுமெண்டார் தெரிவித்தபடி கிச்சிலிசம்பா நெல் ஆடிபட்டத்தில் விசாலமாக நாத்துவிட்டு 30 நாளில் 1—2 நாத்துகளாக நடப்பட்டத்தில் ஒரு மட்டமாக வளர்ந்து அலங்காரசோலம்போல் கதிர்விட்டு பால்ஏறி கதிர்மணி முத்தி வரும்போது எல்லாபயிரும் ஒரே திக்கில் கதிர்சாய்ந்து வெகு அழகாக இருப்பதுடன் ஏகர்1க்கு பட்டணம்படி 2000 வரையில் கண்டு முதலாகியதுடன் வைக்கல் குறைவு அருவடை 130 நாளைக்குள் ஆகிற்று அரிசிசிரியதாயும் சாப்பாட்டுக்கு நேர்த்தியாகவும் இருப்பதால் ஒவ்வொரு விவசாயிகளும் மேற்படி கிச்சிலிசம்பாநெல் சாகுபடிசெய்யலாமென்பது எனது அபிப்பிராயம்

4. இதில் கண்டபடி என் சந்தா சேர்த்து ரூ2—0—0 மணியார்டர் அனுப்பியிருக்கிறேன்.

எ பி. வெங்கிடசாமி நாயுடு

பதில்

கிருபநேயர் விதை எப்படி விதைத்து மூடினார்களென்ற விபரம் எழுதவில்லை. வாரக்காரரும் கிருபநேயரும் ஒரேமாதிரி இடைவிட்டு ஒரே அளவு விதையை ஒரேநாளில் விதைத்தார்களாவென்றும் அப்பால் பயிருக்கு செய் நேர்த்தி ஒரே மாதிரி செய்தார்களாவென்றும் தெரிந்து கொள்ளாமல் தக்க பதில் தரமுடியாது. இரும்புக்கலப்பை கொண்டு சால் ஓட்டி அதனுலேயே விதையை மூடியிருந்தால் விதைகள் பள்ளத்தில்விழுந்து முளையாததால் வித்தியாசப்படக்கூடும்.

2- கோதுமைப் பயிர் கிருபநேயர் குறிக்குமிடத்தில்லாபகரமாய்பயிர் செய்ய போதுமான சிதோஷ்ண முதலியவைகள் கிடையாது. பயிர் முளைக்க வைத்துக் காட்டலாம் ஆனால்மகசூல் கிடையாது. ஆகையால் இதைக் குறித்து எழுதுவதில் பயனில்லை நீலகிரி. கடப்பை கோயமுத்தூர். மதுரை ஜில்லாவில் ஒருபகுதி முதலிய இடங்களில் லாபமாய் பயிர்செய்யலாம்.

கிருஷிகன் பத்திராதிபருக்கு ப. ர்.

நேரில்கண்டு ஆனந்திக்க ஆசைகொண்டேன் அதற்கு நேர்ந்தஅசந்தப்பத்தில் எனக்கு பிரமாதமாயி விட்டது. நான் செங்கோட்டைபோக 2 மாசம் செல்லும். சாம்புவார்வடகரை ஆர்- கே. ராமசாமி அய்யாவர்கள் புதியசத்ராதாரர்கள் ஏர்ப்பட்ட விபரம் தெரிந்தால் சந்தோஷமாகும்- நாகர் கோவில் சமீபம் ஒரு கிராம சேரியில் ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் ஏ, கிரு

ஷ்ணய்யாவர்களிடமிருந்து அவர்கள் மூலமும் பலசந்தாதாரர்கள் ஏற்படுவார்கள். அது விஷயமும் தெரிவிக்கவும் நான் சந்தாதுகையுடன் கூடுதலாகரூ1 பதிலுக்காகவும் எனக்கு வேண்டிய கொடுக்காபுளிவிதை படி 10இலவு விதை படி 2,உள்ளிவிதை கால் ஏக்கருக்கு,மாதுளை ஜாதிக்கு ஒன்று வீதம் திராக்ஷை பதியன் செடி இதுகளுக்கு அட்வான்ஸ் கொடுக்கவும் அனுப்பினேன். எத்தனை ரூபாய் வேணுமென்று தாங்கள் பதில் கிடைத்தஉடன் அனுப்புவதாகவும் எழுதியிருக்கிறேன். தயவுசெய்து மேல் விபரித்த விதைகளுக்கு ஏற்பாடு செய்து நான் அனுப்பவேண்டும் தொகைதெரியும்படி விபரமான பதிலளிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன் தாங்கள் ஸர்க்கூட்டிவிருந்து இதற்குமுன் திரும்பி ஜகாதபாக் சேர்ந்திருப்பீர்க ளென்று நம்புகிறேன் தங்கள் சாந்த குணத்தையும் பரோகார சிந்தையையும் ஒருபோதும் மறக்கமாட்டேன்,

தங்கள் அன்பிற்குரிய

ஜி,சங்கர நாராயணஐயர்

பதில்

ஸ்ரீமான் ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்கராஜுகாரு இன்னமும் வீரகேரளம்புதூரில்தான் இருக்கிறார்கள்: நாமும் எங்கள் சமூக பிரசார விஷயமாய் பல ஊர்கள்சென்று ஜூன்மீ 4உ தான் சென்னை திரும்புவோம். அந்த சமையத்தில் இங்கு சேரும்படி ரூ7 அனுப்பினால், கொடுக்கப்புளி விதையும், இலவம்பஞ்சு விதையும், மாதுளை செடிகளும் அனுப்பக்கூடும். வெங்காயவிதை இதுவரை அமையாததால நம்மால் அனுப்ப சாத்யப்படாது திராட்சைக் கட்டைகளும் அப்பாது அனுப்பக்கூடும்

ப. ர்.

ஸ்ரீமான் ராவ் பகதூர் ஜெ. செல்வரங்க ராஜுகாரு

நானது வருஷத்தில் புதிதாகவே மணல் பாங்கான ஒரு ஏக்கரில் குளத்து வண்டலில் 300 வண்டியும, சாணி எரு 150 வண்டியும், இலுப்பை சககுபனை பாலை முதலானவைகளைப் போட்டும், ஒரு எக்கருக்குள்ள பூருதிட்டம் ரசாயன எருக்களை போட்டும் புகையிலை சாகுபடி செய்ததில் நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது.

புகையிலை வெட்டிய பிறகும் அதே சமயத்தில் இலுப்பைசாகு போட்டு உழுது ரசாயன எருக்களை போட்டும் வெங்காயசாகுபடி செய்யப்பட்டிருக்கிறது,

வெங்காய சாகுபடி செய்ததினால் பிந்தி மறுவருஷபுகையிலை சாகுபடி செய்ய கெடுதல் ஏற்படுமென்று சிலர் சொல்லுகிறார்கள், அந்தப்படி பின்னிட்டு புகையிலை சாகுபடி செய்ய கெடுதி ஏற்படுமா ஏற்படாதா? கெடுதி ஏற்பட்டால் சீர்திருத்தம் செய்யலாமா? செய்யும்படி யாயிருந்தால் எவ்விதமான எரு எவ்வளவு உபயோகித்தால் நல்லபலனைக் கொடுக்கும் விவரம் வகை'

(2) கொள்ளிடகரையில் நஞ்சை நிலத்துக்கு ஒன்றரை மைல் தூரம் வேலி பந்தோபஸ்து செய்யவேண்டியதாக இருக்கிறது- அப்படி செய்யாவிட்டால் ஆடுமாடுகளின் சேதம்வாளமாக ஏற்படுகிறது

அதற்கு செலவு குறைவாகவும் உயிருள்ளதாகவும், ஆடுமாடுகள் தின்னக்கூடாததாகவும் வேலிவைத்து விருத்தி பண்ண வேண்டியதாக இருக்கிறது

அதற்கு எவ்விதமான வேலி வைக்கலாமென்பதையும் அது கிடைக்குமிடத்தையும் விவரமாகத் தெரிவிக்கவேணும்.

(3) குளத்தோரங்களில் மணல்பாங்கான இடத்தில் பிரம்பு உற்பத்தி செய்யவேண்டுமென்பது நமது விருப்பம். அதற்கு நாட்டுப் பிரம்பு அல்லது வேறு என்ன தினுசு இருந்தாலும்சரி அதன் கிழங்குகளை புதைக்கிறதா? கன்கள் நடவேண்டுமா? விதைகள் போடுகிறதா எவ்விதம் செய்வதால் சீக்கிரமாயும் திருப்தியானதுமான பலனை கொடுக்கும் நடுவதற்கு எவ்விதமான பக்குவம் செய்து நடவேண்டும். ஷை விதைகள் எங்கு கிடைக்கும். ஏக்கர் 1க்கு எவ்வளவு தேவை. விலை விபரம் எழுதியனுப்புங்கள்

நாம் தங்களுடைய சந்தாதாரர்களில் ஒருவராகையில், மேல் கண்ட விஷயங்களுக்கு தயவுசெய்து பதில் தெளிவாகவும் விபரமாகவும் தெரிவிக்கக்கோருகிறோம். இத்துடன் 1அணா தபால் முத்திரை அனுப்பியிருக்கிறது.

## பதில்

தங்களுடைய 2.5.29 லெட்டர் கிடைத்தது. தங்கள் லெட்டரில் குறிக்கும் ஒரு ஏக்கர் நிலத்தில் புகையிலை சாகுபடி செய்ய அவ்வளவு ஜாஸ்தி எருசெய்திருக்க வேண்டாமென்பது நமது அபிப்பிராயம். வெவ்சாயம் சாகுபடிக்கு தாங்கள் 2ம்பாராவில் குறிப்பிட்டிருக்கும் அனுபவம்எனக்கு கிடையாது, விவசாய டிபார்டுமெண்டாரும் இவ்வெருக்களை இதுவரையும் கையாடி அவைகள் இன்ன இடத்தில் இன்னபயிருக்குத்தான் சிலாக்கியமானதென்று திட்டமாயும் நிர்மானமாயும் அபிப்பிராயம் பிரசுரிக்கவில்லை. ராயல் விவசாயகமிஷன் அங்கத்தினரின் அபிப்பிராயமும் இதுவே ஆகையால் இவ்விஷயத்தைக் குறித்து நாம் யாதொரு அபிப்பிராயமும் கொடுக்கமுடியாது.

இவ்வெருவிற்கும் கம்பெனிகளுக்கெழுதி தெரிந்து கொள்ளலாம்.

புகையிலைப் பயிருக்கு இதவரை ஆட்டு மாட்டெருக்களை உபயோகித்து புகையிலை நட்டபின் பயிர் ஒருமாதக்காலமாகும்போது ஒவ்வோர் மூட்டிற்குய் வெடியுப்பு கொஞ்சம் உபயோகித்து கிருஷிகர் நல்ல பலன் அடைந்திருக்கிறதைப் பார்த்திருக்கிறேன். ஆகையால் மற்ற எருக்கள் உபயோகத்தைக் குறித்து நமக்குத் தெரியாததனால் நாம் அபிப்பிராயம் சொல்ல இடங்கொடுக்கவில்லை,

தாங்கள்போட்ட அவ்வளவு எருபோட்டது விரர்த்தம்தான்.

வேலிபோட வேண்டுமானால் முள்ளுக் கிழுவை வேலியை குறைந்த செலவில்போட்டு கூடியமட்டும் ஆடுமாடு அழிமானமில்லாமல் வைக்கலாம் மூங்கில் வேலியும் நடலாம்,

பிரம்புவைத்து உற்பத்தி பண்ணி நமக்கு அநுபவமில்லை காட்டு இலாகாதாருக்கு எழுதி இவ்விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம் பிரம்பு பழங்கள் மூலமாயும் கிழங்குகளைநட்டும் பயிர் செய்யக்கூடும்,

## மதிப்புரை

### ஜாதக கணிதம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்:—

இது டிம்மி 1-8ல் 274 பக்கங்கள் கொண்ட உயர்ந்த காகிதப் பதிப்பு. ஸ்ரீமான் ஸ. ஜி. ராஜன் பி. ஏ. அவர்கள் இயற்றியது. 7 வெங்கடேச மேஸ்திரி தெரு சௌகார்பேட்டை சென்னை.

இதில் கிரகசட்பலம், துவாதச பாவபலம், சப்தவர்க்கம், பாவ சக்கிரம் ஆயுள்கணிதம் முதலியவற்றைச் சுலபமாய்ப் போடும் முறைகள் விளக்கப்பட்டுள்ளன. ஜாதகம் கணிப்பதில் நேரும் சிரமத்தையும் கணிதவித்தையில் அதிகப் பழக்கமில்லாததினால் உண்டாகும் கஷ்டத்தையும் இந்நூலால் நிவர்த்திக்க இதன் ஆக்கியோன் மனஸ்பூர்வமாய் உழைத்திருக்கிறார். ஜோதிடப் பார்ப்பதற்கான வழிவகைகளையும், விவரங்களையும் உதாரணங்களின் மூலமாகத் தெளிவாகவும் விசாலமாகவும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இதன் ஆசிரியரது ஆராய்ச்சியை எவரும் பாராட்டுவர். ஜோதிட சாஸ்திரத்தில் பழக்கமுள்ளவர்களுக்கு இப்புதிய நூல் மிகவும் உபயோகமுள்ளதாய் இருக்குமென்று நம்புகிறோம். விலை ரூ 2 0 0

---

## The Journal of the
### Madras Agricultural Students Union

A Monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign. Subscription per annum Rs. Four. Single copy as Six.

Apply to Manager M. A. S. U. Journal
AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P. O.
Coimbatore.

## விவசாயப் புத்தகங்கள்

| | ரூ. அ. பை. |
|---|---|
| விவசாய விளக்கம் | 1—4—0 |
| நெல் | 1—0—0 |
| கரும்பு | 1—0—0 |
| மா | 0—7—0 |

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் நாயுடு
பென்ஷண்ட் விவசாய இன்ஸ்பெக்டர்
பெரியபாளையம், பொன்னேரி மார்க்கம்

# "கிருஷிகன்" பஞ்சாங்கம்

சுக்லஹு ஆனிமீ — சாலிவாகன 1852, கலியுகாதி 5031 பசலி 1338 —1339 கொல்லம் 1104. இங்கிலீஷ் 1929ம்ஹு ஜூன்-ஜூலைமீ

| முகர்ரம் | ஜூன் | ஆனி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | 14 | 1 | வெ | அஷ்55-18 | பூர11-18 | சி55அ | கரிநாள் |
| 7 | 15 | 2 | ச | நவ 53-58 | உத்ர10:58 | ம60 | செடிகள் நட |
| 8 | 16 | 3 | ஞா | தச 53-50 | ஹஸ்11,46 | அ12சி | முகூர்த்த நாள் ஏர்கட்ட |
| 9 | 17 | 4 | தி | ஏகா54-57 | சித்13-48 | ம14அ | சங்கீதாரம்பம் |
| 10 | 18 | 5 | செ | துவா 57-20 | சுவா17,4 | சி17ம | ராமலட்சமண துவாதசி |
| 11 | 19 | 6 | புத | திர 60-0 | விசா21:31 | சி60 | கரிநாள் |
| 12 | 20 | 7 | வி | திர0_50 | அநு26-59 | சி27ம | கிரஹப்பிரவேசம் |
| 13 | 21 | 8 | வெ | சது 5-11 | கே29-59 | ம30அ | கிரீடம் சூட்ட |
| 14 | 22 | 9 | சனி | ○ ப9-54 | மூல39-22 | சி60 | உபநயனம் |
| 15 | 23 | 10 | ஞா | பிர14-49 | பூரா45.43 | சி46ம | மருந்துண்ண |
| 16 | 24 | 11 | தி | துதி 19_27 | உத்51-44 | ம52அ | சீமந்தம் |
| 17 | 25 | 12 | செ | திரு 23_29 | திரு56-56 | சி60 | அன்னப்பிராசனம் |
| 18 | 26 | 13 | புத | சது 26-32 | அவி60-0 | ம60 | பெண்ணழைக்க |
| 19 | 27 | 14 | வி | பஞ்26-28 | அ1-3 | சி1ம | பூமிவாங்க கடன்தீர்க்க |
| 20 | 28 | 15 | வெ | சஷ் 29-9 | சத 4-1 | ம4சி | முகூர்த்தம் |
| 21 | 29 | 16 | சனி | சப் 28-32 | பூர5-42 | ம6சி | சவுளம் |
| 22 | 30 | 17 | ஞா | அஷ்26-43 | உத்6-9 | அ60 | ருதுசாந்தி |
| 23 | 1 | 18 | தி | நவ 23-47 | ரே5-29 | சி60 | பூமுடிக்க: |
| 24 | 2 | 19 | செ | தச19-55 | அசு3_4 | சி60 | மூலிகைபிடுங்க |
| 25 | 3 | 20 | புத | ஏகா 15-15 | பர1.18 | சி1அ | கிருத்திகைவிரதம் |
|  |  |  |  |  | *கா56-46 |  |  |
| 26 | 4 | 21 | வி | துவா 9-58 | ரோ54-22 | சி60 | முகூர்த்தம் |
| 27 | 5 | 22 | வெ | திர4-12 | மிரு50 20 | சி60 | மழைபெய்யலாம் |
|  |  |  |  | சது 53-54 |  |  |  |
| 28 | 6 | 23 | ச | ● அ52-0 | திரு46_14 | சி60 | கதிரறுக்க |
| 29 | 7 | 24 | ஞா | பிர 45-59 | புன42_13 | சி60 | மழைபெய்யலாம் |
| 30 | 8 | 25 | தி | துதி40-22 | பூச38_34 | சி60 | முகூர்த்தம் |
| 1 | 9 | 26 | செ | திரி35-14 | ஆயி35-25 | சி60 | மழைபெய்யலாம் |
| 2 | 10 | 27 | புத | சது30_15 | மக32-53 | சி33அ | விதைவிதைக்க |
| 3 | 11 | 28 | வி | பஞ்27-6 | பூர31-14 | சி31ம | மாடுவாங்க |
| 4 | 12 | 29 | வெ | சஷ்24-30 | உத்30,36 | சி31அ | முகூர்த்தம் |
| 5 | 13 | 30 | ச | சப்23-2 | அஸ்41_8 | ம60 | கும்பாபிஷேகம் |
| 6 | 14 | 31 | ஞா | அஷ்22 50 | சித்32-53 | சி60 | நாமகரணம் காதுகுத் |
| 7 | 15 | 32 | தி | நவ23 54 | சுவா35-54 | அ36ம | முகூர்த்தநாள் |

# இரு கிருஷிகர்களின் சம்பாஷணை

ரங்கசாமி பிள்ளை:—ரெட்டியார் அவாள்! நேற்றையதினம் சாயந்திரம் தங்களைக் காண்பதற்காகத் தங்கள் வீட்டிற்கு வந்திருந்தேன். தாங்கள் வெளியில் போயிருப்பதாகச் சொன்னார்கள்.

பாஷ்யம் ரெட்டியார்:—ஆம் வாஸ்தவமே! நேற்று நடந்த கண்காட்சியில் இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீசால் நடத்தப்பட்ட ஒளி விசித்திரப்படக் காட்சியைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

ர. பிள்ளை:—அந்தக் காட்சியில் நடந்த விஷயத்தின் சாராம்சம் என்ன?

பா-ரெட்டியார்:—சொல்லுகிறேன். கேளுங்கள். உபன்யாஸம் செய்தவர் சொன்னதாவது. சாணி யெருவைவிட சிறந்த எருவே உலகத்தில் இல்லை யென்றும், நல்ல சாணியெரு கிடைக்காததால் ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ் பேட் முதலிய செயற்கை உரங்களை உபயோகிக்க வேண்டுமென்றும் இவ்விதம் இச்செயற்கை உரங்களை உபயோகித்தால் நிலத்தின் கண்டு முதலை அதிகரிக்கச் செய்யலாம் என்றும் சொன்னார். இத்துடன் இம்பீரியல் கெமிகல இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட் என்னும் கம்பெனியாரின் பிரதிநிதிகளும் பிரசாரகர்களும் நம்முடைய நிலங்களைப் பரிசோதித்து அவைகளினுடைய இயல்புக்குத் தக்கவாறு உரங்களைச் சிபார்சு செய்கிறார்கள்- இவர்கள் விவசாய இலாகாவின் கொள்கைக்கு ஏற்றவாறு உரங்களைச் சிபார்சு செய்கிறதனால், அநேகமாய் எல்லா மிராசுதாரர்களும் இவர்களுடைய உரங்களை வாங்குகிறார்கள் என்றும் எடுத்துக் காட்டினார். சல்பேட் ஆப் அம்மோனியா ஸூபர்பாஸ்பேட் முதலிய உரங்களை இந்திரிய வஸ்துக்களுடன் கலந்து உபயோகிப்பதால் கிடைக்கும் ஜாஸ்திமாகுலை படங்கள் மூலமாய்க் காண்பித்தார்கள்: ஐக்கிய விவசாயச் சங்கங்களின் நிரூபணைப் பண்ணைகளில, எல்லா அபிவிருத்திகளுடன் இவ்வுரங்களையும் உபயோப்பதால் கிடைத்த அதிகமாகுலைப் படங்கள் மூலமாய் செவ்வனே விளக்கிக்காண்பிக்கப்பட்டன.

ர. பிள்ளை:—இவ்வுரங்களை உபயோகிப்பதால் நிலத்தின் தன்மை கெட்டு விடுகிறதென்றும் இவ்வுரங்களை உபயோகித்தால், ஜீவாதாரத்திற்கு ஏதுவான பிராணாபிவிர்த்தினி (வைட்டாமின்) என்னும் சத்து இல்லாததனால் இவ்வுரங்களின் பயனாகக் கிடைத்த தானியங்களை உண்பது சக்கைக்குச் சமானமென்றும் சிலருடைய அபிப்பிராயம்.

பா. ரெட்டியார்.—விவசாய இலாகாவின் அதிகாரியான டைரெக்டர் துரையவர்கள், அவர்கள் செய்யும் பிரசங்கங்கள் தோறும் ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸூபர்பாஸ்பேட்டையும் வழக்கமாய் உபயோகிக்கும் தொழு எருவில் பாதியுடனாவது அல்லது மூன்றில் ஒருபங்குடனாவது உபயோகிக்கும்படிச் சொல்லுகிறார்கள் அல்லவா? இவ்விதம் இயற்கை உரங்களையும் செயற்கை உரங்களையும் கலந்து உபயோகித்து தற்காக விலைரீதி, கால வேறுபாடுகள் முதலியவற்றிற்குத் தக்கவாறு பயிரிடுவது ஒவ்வொரு மிராசுதாரரின் கடமையென்றும் வற்புறுத்தினார்கள். இனி நாம் அவருடைய புத்திமதிகளுக் கேற்றவாறு நவீன விவசாய முறைகளையே கையாட வேண்டும். இன்று முதல் செயற்கை உரங்களை அதிகமாக வாங்க வேண்டும்.

ர. பிள்ளை,— நீங்கள் சொல்வதிருக்கட்டும். புஸ்தகத்தைப் படித்துவிட்டு உபன்யாசம் செய்யும் இவர்கள் பேச்சை நம்பிச் செய்வது "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவும்" என்று நினைப்பது போ ல்லவா இருக்கிறது. இவர்கள் சொற்படி நாம் பயிரிடுவோமானல், நமக்கு ... வது மிஞ்சுமா?

பா. ரெட்டி:—நன்றாய்க் கேட்டீர், நான் இதற்கு முன் எனக்குக் கிடைத்த சாணி எருவை என் நிலங்களில்பாதிக்கு உபயோகித்து, பாதிக்கு எருப்போடாமலே பயிரிடுவது வழக்கம். இம்பீரியல் கெமிகல இண்டஸ்ட்ரீஸ் பிரசாரகர்கள் சொற்படிக்கு நான் 3 வருஷக்காலமாய் எனக்குக்கிடைக்கும் சாணியெருவை என் நிலங்கள்பூராவிற்கும் உபயோகித்து, இவைகள் எல்லாவற்றிற்கும் ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸுபர்பாஸ்பேட்டையும் உபயோகித்து வருகிறேன். இத்தனை வருஷமாய் எனக்குக் கிடைத்துக் கொண்டிருந்த லாபத்தை விட இப்பொழுது இரண்டு பங்கு கிடைக்கிறது. அப்படியிருக்கையில் நாம் என் இவ்வுரங்களை உபயோகிக்கக்கூடாது, இது மாத்திரமல்ல, நான் சாணி யெருவிலும் கொஞ்சம் உபயோகிப்பதனால் நிலத்தின் தன்மையும் விருத்தியாகிறது. ஆகவேஇப்பொழுதாவது நீர் திருப்தி யடைந்தீரா?

ர. பிள்ளை—அதிருக்கட்டும், நம்மைப்போன்ற சுதேசிகள் அயல் நாட்டிலிருந்துவரும் வஸ்துக்களாகிய ஸல்பேட் ஆப்அம்மோனியாமுதலியவைகளை வாங்குவது தர்மமாகுமா?

பா. ரெட்டியார்—நன்றாய்ச் சொன்னீர், நீர் சொன்னவை யாவும் தெரியாத்தனத்தால் என்று நினைத்து நான் வருத்தப்படுகிறேன். நம் தாய்நாட்டிலேயே வங்காளம், முதலிய அநேக மாகாணங்களில் ஸல்பேட் ஆப் அம்மோனியாவை ஏராளமாக உற்பத்தி செய்கின்றார்கள், இப்படியிருக்கையில் இவைகள் அயல் நாட்டுச் சாமான்கள் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

ர. பிள்ளை—இப்பொழுதுதான் எல்லா விஷயங்களும் நான்தெரிந்துகொண்டேன். ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸுபர்பாஸ்பேட் முதலிய உரங்களைப்பற்றிய விலைவிபரமும், இவைகள் கிடைக்கும் இடங்களும் இவைகளை உபயோகிக்க வேண்டிய முறை அளவு காலம், முதலியவைகளும் யாரைக் கேட்டால் தெரியவரும்?

பா. ரெட்டியார்.—சென்னை அரமனைக்காரத் தெரு119, 120நெம்பருள்ள இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீசுக்காவது அல்லதுபற்பலஇடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான டெப்போக்களுக்காவது, உமக்குஸமீபத்திலுள்ள மேற்படி கம்பெனியார்களின் பிரசாரகர்களுக்காவது எழுதினால் அவர்களால் இயன்ற உதவியைச் செய்யத் தயாராயிருக்கிறார்கள். தவிர ஸல்பேட் ஆப் அம்மோனியாவையும் ஸுபர்பாஸ்பேட்டையும் உபயோகித்த மிராசுதார்களின் அபிப்பிராயம் என்னும் இப்புஸ்தகத்தை ஒரு முறை படிப்பீரானால் உம்முடைய சந்தேகம் எல்லாம் பறந்துவிடும்.

ர. பிள்ளை.—உம்மால்இன்று அநேகவிஷயங்கள்தெரிந்துகொண்டேன், இனி நான் இவ்விதமே செய்கிறேன், எனக்கு நேரமாய் விட்டபடியால் நான் போய் வருகிறேன் வந்தனம்.

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா)லிமிடெட்

119, 120 அரமனைக்கார தெரு மதறாஸ்

(விளம்பரம்)

Printed and Published by J. R Rangaraju
at the Raju Press "Jaganatha Baugh" Saidapet (Madras)